1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS, JAFFNA
phone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு சித்திரை மாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 16-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சிலதினங்களாக மப்பும்மந்தாரமுமாயிருந்து இன்றுகாலைமுதல் நல்லமழை பெய்துகொண்டுவருகிறது.

### பிரதமர்களின் வரவு

கொழும்பிலே நேற்றைத்தினம் கூடியுள்ள ஆசியபிரதமர்களின் மகாநாட்டிற் கலந்துகொள்ளுமாறு பண்டித நேரு (இந்தியா) ஜனாப்முகம்மதலி (பாகிஸ்தான்) டக்றர் அலிசாஸ்திரோ ஆமித் ஜோஜோ (இந்தோனேஷியா) திரு. தாகின் நூ(பர்மா) ஆகியநான்கு ஆசியநாடுகளின் பிரதமர்களும் சென்ற செவ்வாய்க்கிழமை தங்கள் தங்கள் நாடுகளிலிருந்து விசேஷவிமானங்களில் கொழும்புவந்து சேரலாயினர். பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் இரத்மலானைவிமானநிலையஞ் சென்று அவரை வரவேற்று அழைத்துச் சென்றனர்.

### இதற்குத்தானுவருகின்றார்கள் ?

மாவரிநடைமுறைபற்றி விசாரணை செய்யும் விசேஷ கம்மிற்றிமுன்பாகச் சென்ற 23-ந் திகதியன்று அகில — இலங்கைக் காந்திய சேவாசங்க தூதுக்கோஷ்டியைச் சேர்ந்த திரு. வி. இளையதம்பி அவர்கள் சாட்சியம் அளித்தபோது: இந்தியாவிலே மதுவிலக்கு நடைமுறைக்கு வந்தபிறகு பெருந்தொகையான இந்திய சங்கீத வித்துவான்களும், சினிமாநடசத்திரங்களும் முற்றாகக் குடித்துக் களிப்புறுவதற்கென்றே யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனரெனக் கூறலாயினர். இதற்குத்தானு இவர்கள் அப்படியெல்லாம் வருகின்றாகள் ?

### சமாதானங் கூறுகின்றார்

சுதந்திரமண்டபத்திலே பாராளுமன்றத்தை மகாராணியார்ஆரம்பித்துவைத்தபோது தமிழிலே நன்றியுரை கூறப்படாதது அரசாங்கம் செய்துகொண்ட தீர்மானம் அல்லது வேறெந்தமுடிபுகாரணமாகச் செய்யப்பட்டதன்று; ஆனல், தற்செயலாக நிகழ்ந்ததென்று சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் சமாதானங்கூறியிருக்கின்றார். இன்னும தமிழும், சிங்களமுமே இலங்கையின் அரசகரும மொழிகள்; இதில் எவ்விதமாற்றமும் செய்யப்படமாட்டாதென்றும் அவர் அழுத்தமாகத் தெரிவித்திருக்கின்றார்.

### உண்ணுவிரதம் நின்றது

காங்கேசன்துறை அரசினர் சிமெந்துத்தொழிற்சாலையில் உண்ணுவிரதமிருந்த நான்கு தொழிலாளர்களும் கைத்தொழில் மந்திரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களது கேள்வியின்பேரிலே பதினெட்டுநாட்களின்பின் சென்றதிங்கட்கிழமைதங்கள் உண்ணுவிரதத்தை நிறுத்திக்கொண்டனர்.

### கல்லூரி ஆரம்பம்

ஈஸ்றர் விடுமுறை காலம்முடிந்து சம்பத்திரிசியார்கல்லூரி மறுபடி வைகாசி மாதம் 6-ந் திகதியாகிய வருகிற வியாழக்கிழமை ஆரம்பமாகும்.

### பெற்றாரின் கடமை

ஜா-எல வாசிகளால் கட்டப்பெற்ற புதியபாடசாலை ஒன்றைக் கொழும்பு அதிமேற்றிராணியார் சென்றவெள்ளிக்கிழமை ஆசீர்வதித்துப் பேசியபோது: "பிள்ளைகளுக்குக் கல்விபயிற்றுவது பெற்றோருக்குள்ள ஓர்கடமையாகும்; ஆதலால் பாடசாலைகளைக் கட்டித்தரும்படி அரசாங்கத்தை எதிர்பார்த்திராது பெற்றாரே தங்கள் பிள்ளைகளுக்கென அவற்றைக் கட்டவேண்டு"மெனக்கூறிப் பிள்ளைகளின் சமயகல்வி விஷயமாய் விசேஷசிரத்தை எடுக்குமாறு பெற்றோருக்கு மனுப்பண்ணிக்கொண்டார்.

### மகாராணிவிஜய மகிமைப்பட்டம்

எலிசபேத்மகாராணியார் இலங்கையிலிருந்து புறப்படுமுன் அரசதம்பதிகளின் சுற்றுப்பிரயாண சம்பந்தமாகப் பணியாற்றிய இருபதுபிரமுகர்களுக்கு "றோயல் விக்ரோறியன ஆடர்" எனும் மகிமைப்பட்டம் வழங்கிச்சென்றிருக்கின்றார். இவர்களிலே சேர்ஒலிவர் குணதிலக அவர்களுக்கு கே. சி. வி. ஓ. பட்டம். இலங்கை றெயில்வேமனேஜர் திரு. எம். கனகசபைஅவர்களுக்கு எம. வி. ஏ. (வகுப்புIV)பட்டம். அரசதம்பதிகள் பொலநறுவைக்கும், நுவரெலியாவுக்கும் றெயின்வண்டிமூலம் செய்தவிஜயத்திற்கான பிரயாணஒழுங்குகளுக்கெல்லாம் பொறுப்பாளி இவரே. அதிகப்படியான மெய்காப்பாளரான லெப்ரினன்ட் — கமாண்டர் ஆர். கதிர்காமர்அவர்களுக்கு எம். வி. ஓ. (வகுப்பு V)பட்டம். அரசதம்பதிகள்பிரயாணஞ்செய்துவந்த "கோதிக்" என்றகப்பல் கொழும்புத்துறைமுகத்துள் பிரவேசிக்குமுன் அதற்குப் பரிவாரமாகவந்த விஜயாஎனும் இலங்கை யுத்தக்கப்பலின் கப்ரின் இவரே. திரு. ஜே. எஸ். விக்ரோறியா அவர்களுக்கு எம். வி. ஓ. (வகுப்பு V)பட்டம். அரசதம்பதிகள் பிரயாணஞ்செய்த றெயின் வண்டியிலே விசேஷமாய்ப் போசனதிகள்ஆதியாம் ஒழுங்குகளுக்கெல்லாம் பொறுப்பாளி இவரே. இவர் சென்றார் சேர் டொனத்துஸ் விக்ரோறியா அவர்களின் புதல்வராவர்.

### புதிய உபநீதியரசர்

அசைஸ்கம்மிஷனரான திரு. எம். சி. சான்சொனி அவர்கள் சுப்பிறீங்கோட்டு உபநீதியரசராக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் அடுத்த வைகாசி 10-ந் திகதியன்று பதவியேற்பார். மற்றோர் அசைஸ்கம்மிஷனரான திரு. எச். என். ஜி. பெர்ணண்டோ அவர்கள் தற்காலிக உபநீதியரசராக நியமனஞ்செய்யப் பட்டிருக்கின்றார்.

### அர்ச். சூசையப்பர் பந்தி

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீ போல்சபை அர்ச். சூசைடப்பர்பந்தியின் வருடாந்தகூட்டம் சென்றஞாயிற்றுக்கிழமைபிற்பகல் சென்சாள்ஸ் பாடசாலையிலே ஆசனக்கோவிற் கட்டளைக்குரவர் வண. பி. ரி. ஜேம்ஸ் சுவாமியவர்கள்தலைமையில் நடந்தேறியது. அதற்குக் குருப்பிரசாதிகளும், பலவேறுபந்திகளின அங்கத்தவர்களும், மற்றும்அபிமானிகளும் திரளாகச் சமுகமளித்திருந்தார்கள் வருடாந்தஅறிக்கையும், வரவுசெலவுக்கணக்கும் படித்துக்காட்டப்பட்டபின் வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்கள் சென் வின்சென டீ போல்சபையை அடியிட்டவரான பிறடெறிக் ஒசானம்அவர்களின் சீரிய வாழ்க்கைவரலாற்றையும், அவரதுசமூக, தரும, கத்தோலிக்கசேவைகளின் சிறப்பையும் இனியதமிழிலே உணர்ச்சிபெருக அழகாக எடுத்துக் கூறி அரியதோர் சொற்பொழிவாற்றினர். ஈற்றில், ஆசிரியர் எல். கிறேஷியன் அவர்களும், தலைவர்சுவாமிகளும் கூறிய குறிப்புரையோடும், பந்தியின் அக்கிராசனாது நன்றியுரையோடும் கூட்டம் செவ்விதே முடிவெய்திற்று.

### மகன்தாக்கப்பட்டு மரணமானன்

சாவகச்சேரிக்குச் சமீபமான கெற்பெலியிலே கணபதிப்பிள்ளை கந்தர் எனும்ஒருவர் சென்றவெள்ளிக்கிழமை அருணாசலம் எனும் மற்றொருவரை அடித்துத் தாக்கிக்கொண்டிருந்தபோது, அருணாசலத்தின்மகனான 18 வயதுள்ள தம்பிப்பிள்ளை ஓடிச சென்று, என் தகப்பனைத் தாக்குகிறாய்? என்றுகேட்டு அவரைக் காப்பாற்றமுயன்றபோது, கணபதிப்பிள்ளை கந்தர் தான்வைத்திருந்த தடியினால் கடுமையாக அவரைத்தாக்கிப் படுகாயப்படுத்திவிடவே, அவ்வாலிபர் அமபுலன்ஸில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு அங்கே இறந்துபோயினர். தாக்கியவர் கைது செய்யப்பெற்று அடுத்தமாதம் 6-ந் திகதிவரையிலே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

### யாழ்ப்பாண மத்தியநூல்நிலையம்

யாழ்ப்பாண மத்திய நூல்நிலைய நிதிக்கென்று சுதந்திர ஆசியகம்மிற்றி கொடுக்கவாக்குப்பண்ணிய 1,04 500ரூபாவுக்கு ஓர்காசோலையை அக்கமிற்றியின் பிரதிநிதியான திரு. ஹொல் புறாக் பிறுட்லி அவர்கள் சென்ற 20-ந் திகதியன்று நகரமண்டபத்தில் நடைபெற்ற கூட்டம்ஒன்றிலே மேயர் சாம் சபாபதிஅவர்களிடம் கையளிக்கலாயினர். அவ்வேளை மேயர்அவர்களும், நம்மேற்றிராணியாண்டவர்அவர்களும் சுதந்திரஆசிய கமிற்றியினருக்கும், அமெரிக்காவுக்கும் நன்றிதெரிவித்து நின்றார்கள். இந்தநூல்நிலையத்திற்குப் புத்தகங்கள், பிரசுரங்கள், மற்றும் இவைபோன்றவசதிகள்செய்வதாகவும் பிரதிநிதி வாக்களித்தனர்.

### சென்வின்சென்ற் டீ போல் சபை

சென்வின்சென்ற் டீ போல் தருமசபைப்பந்திகளின் 1954-ம் ஆண்டிற்கான முதலாவது காலவருடக்கூட்டம் அடுத்த வைகாசிமாதம் 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-30மணியளவில் அர்ச். சூசையப்பர்கூட்டச்சாலையில் நடைபெறும். அதற்குச் சகல காரியஅங்கத்தவர்களையும் சமுகமளிக்குமாறு தனிச்சங்க காரியதரிசி கேட்டுக்கொள்ளுகின்றார்.

### ஒரேயொரு சீவவிபத்து

மகாராணியார் இலங்கையில் தங்கியிருந்த பன்னிருதினங்களிலும் சனப்போக்குவரத்தும், வாகனப்போக்குவரத்தும் மிகவதிகமாய் இருந்தபோதிலும் கொழும்பில் சீவமோசமான ஒரேயொரு மோட்டார்த விபத்துமாத்திரம் நடந்திருக்கிறது. மோட்டார் சைக்கிளில் சென்றஒருவர் ஓர்காரை வழிவிலகி முன்னேறிச்செல்ல முயன்றபோது அந்தக்காருடன் மோதியகாரணமாக அவர் சீவமோசம் அடையலாயினர். பன்னிருதினங்களிலும் அங்கு காயமடைந்த பாதசாரிகள் இருவரே.

### மகாராணியாரின் அங்கீகாரம்

சோல்பறிபிரபுவைத் தொடர்ந்து இலங்கைக் கவர்னர்—ஜெனறல் பதவிக்குச் சேர்ஒலிவர் குணதிலகஅவர்களின் நியமனத்தைத் தமது அரசாங்கம் செய்துள்ள சிபாரிசின்பேரிலே எலிசபேத்மகாராணியார் கொழும்பைவிட்டுப் புறப்படுமுன் மனமுவந்து அங்கீகரிக்கலாயினர். இந்தநியமனம் வருகிறஆடிமாதம் 17-ந்திகதியன்று நடைமுறைக்குவந்து, அன்றுதினம் புதிய கவர்னர்—ஜெனறல் இராணிமாளிகை செல்வார்.

### மகிமைப் பட்டங்கள்

எலிசபேத் மகாராணியார் சென்ற 21-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 12-45 மணிக்கு இராணிமாளிகையில் கூட்டிய பிறிவிகவுணசில் கூட்டம் ஒன்றிலே பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்களை ஓர் பிறிவிகவுண்சிலராக நியமனஞ்செய்யலாயினர். இலங்கையின் மூன்றாவது பிறிவிகவுணசிலர் இவராவர். கவர்னர்—ஜெனறல் சோல்பறிபிரபுவுக்கு ஜி. சி. வி. ஓ. எனும் பட்டத்தை மகாராணியார் வழங்கலாயினர்.

### பண்ணைக் கடற்பாதை

பண்ணைக்கடற்பாதையைப் பூர்த்திசெய்யவேண்டிய அவசியத்தைப்பற்றிக் கலந்துபேசுமாறு ஊர்காவற்றுறைப் பிரதிநிதியான திரு. ஏ. எல். தம்பியையா அவர்களைத் தலைமையாகக்கொண்ட தூதுக்கோஷ்டி ஒன்று சமீபத்திலே பிரதமரைச் சந்திக்கவிருக்கிறது. கொட்டாஞ்சேனையிலுள்ள தீவுபற்றுகளின் ஐக்கியசங்கக் கூட்டமொன்றிலே இவ்வாறுசெய்யத் தீர்மானிக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பது வெள்ளிக்காசு

"போன்"

இரவு எட்டுமணிஅடித்தது. டக்றர் ஞானத்தின் மோட்டார்வண்டி அவர் வீட்டுவாசலில் வந்துநின்றது. அவரது மனைவி புஷ்பா புன்சிரிப்புடன் ஓடோடி வந்து வண்டியின்கதவைத் திறந்தாள். டக்றர் இறங்கும்போதே: "அம்மா! இன்றுகூட்டத்தில் ஐயாவின் பேச்சுக்கு அபாரமதிப்பு" என்றான் மோட்டார்வண்டிச்சாரதி.

"ஐயா அப்படிஎன்னதான் பேசிவிட்டார்?" என்று அன்பொழுகக் கேட்டுக்கொண்டே கணவன் முகத்தைப் பெருமையோடுபார்த்தாள் புஷ்பா.

"இந்தப்பட்டினத்திலே கைலஞ்சம் வாங்காத ஒரேடக்றர் நான்தான்என்று அவர் கூறியபோது, சனக்கூட்டத்தின் ஆரவாரத்தோடு நானும் துள்ளிக்குதித்தேன்அம்மா" என்றான் அவன்.

திடீரெனக் காலில்முள்தைத்தால் எப்படியிருக்கும்? சாரதியின் வார்த்தையைக்கேட்ட புஷ்பாவின்நிலையும் அப்படித்தானிருந்தது.

புஷ்பாவின் முகபாவத்தைக் கவனித்தடக்றர் சாரதியை முறைத்துப் பார்த்துக்கொண்டே வீட்டினுள்சென்றார். உள்ளேசென்றவர் தனதுமேற்சட்டையைக் கழற்றிச் சுவர்க்கொழுக்கியில் மாட்டியபோது, தனதுமனமும் எங்கேயோ ஒருஆணிமுனையில் மாட்டப்பட்டதாக உணர்ந்தார். வேதனைதரும் அந்தநினைவானது, புஷ்பாவின் முகத்தில் ஊற்றெடுத்து வேகமாகஓடிவருவதைக் கண்டார். "சாரதியின் புகழ்ச்சியைக்கேட்டபோது மலர்ந்திருந்த அவள்முகமலர் சுருங்கியதே; அதற்குக்காரணம் என்ன?" என்று தன்னையேகேட்டுக்கொண்டார். தனது உழைப்பின் உட்பொருளைக் கண்டுவிட்டாளோ? என்றசந்தேகம் அவர்உள்ளத்தில் உற்பத்தியாகி உறுத்தியது. சிந்தனைச்சுழலில் சிக்கித்தவித்து, அங்கும்இங்குமாக அறையினுள்ளே விரைவாக நடந்துவிட்டுச் சோபாவில் சாய்ந்தபடியே 'சிகறெற்' ஒன்றைஎடுத்துப் பற்றவைத்தார், அப்போது எதிர்பாராமல் அவரதுகண்பார்வை எதிரேயிருந்த சாலையின் முன்அறையை நோக்கிப் பாய்ந்தது. அங்கேபுஷ்பா ஓர்திருமுகப் படத்தின்முன் விளக்கைத்தூண்டிக் கொண்டிருந்தாள். இச்செயலால் சில விநாடிகள்வரை டக்றரின்சிந்தனை ஸ்தம்பித்துவிட்டது. புஷ்பா சென்றுவிட்டாள். அவள்ஏற்றியதீபம் பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்தது.

"புஷ்பா எவ்வளவுநல்லவள்—கள்ளம்கபட மற்றவள்—திருமுகப்படத்தின்முன் தனது புனிதஇதயத்தையே ஏற்றிவிட்டுப் போயிருக்கிறாள்." அவர் உள்ளம் இப்படிப்பேசியது. கைவிரல்களினிடையேஇருந்து தானுகவேகருகிக் கொண்டிருக்கும் சிகறிற்றின்மீது அவரதுகவனம் சென்றது. மின்னிமின்னிக்கொண்டிருக்கும் அதன்சின்னஒளி தனதுஆத்துமநிலையைப் பிரதிபிம்பிப்பதைக் கண்டுதயங்கினார். "பிரகாசமான எண்ணெய்விளக்கு— புனிதவதி புஷ்பா. கருகிக்கொண்டிருக்கும் சிகறெற்—நான்." இப்படி அவர் ஒப்பமிட்டுப்பார்த்தபோது, தனதுஆன்மநிலை மிகப்பயங்கரமாக இருப்பதைப் பார்த்தார். முகம் சலவைக்கல்போல வெளிறிற்று. எத்தனையோநோயாளிகளுக்குச் சுகவழிகாட்டுகின்றஅவர் தனதுமனநோயினின்றும் மீளவழியின்றித் தவித்தார். லஞ்சப்பேய்கள் கோரப்பற்களோடு கைகளைநீட்டி நரகநாட்டியம் ஆடின. அந்தப்பணத்தின் கிண்கிணிஒலியோடு ஏழைநோயாளிகளின் அழுகுரல் பின்னணிக்கீதம் பாடியது. டக்றர்ஞானத்தின்ஆன்மா அவஸ்தைப்பட்டுத் தத்தளித்தது.

திடீரெனச் சாளரக்கதவுகள் காற்றினால்மோதுண்டன. நொருங்கிவீழ்ந்த கண்ணாடித்துண்டுகளோடு, அவர்கற்பனையும நொருங்கித் தூள்தூளாயிற்று. வடதுருவத்தில்நின்ற அவரதுசிந்தனைக்குதிரை ஒரேதாவலில் தென்துருவத்தில் குதித்தது. அவநடையகற்பனைகள்யாவும் சுத்தமுட்டாள் தனம் என்று சுயநினைவு சொல்லிற்று.

உழைக்கத்தெரியாத சோம்பேறிக்கும்பலின் வாட்டுக்கூச்சல்தான் இந்த லஞ்சம்என்ற வார்த்தை. கடமைக்கு அப்பால்நின்றுசெய்யும் தூயசேவையின் சிறுபங்குக்குப்பெயர் லஞ்சமா? அறிவற்றவர்களின் அர்த்தமற்றபேச்சுக்குச் செவிசாய்ப்பது அறிவீனம். உலகத்தின் இன்பமாளிகை பணத்தையே அத்திபாரமாகக்கொண்டு படைக்கப்பட்டது. பணம்அற்றவன் பிணம். புஷ்பாவின்குணமும் இந்தப் பணத்தில் மிதந்துவரும் மணந்தான். பாவம், பழி, பாதகம், லஞ்சம் இவையெல்லாம் ஆண்டிகள்கூடிப் பிதற்றும் வீண்பேச்சுக்கள் — இந்த மனப்போராட்டத்தில் அவருக்குச் சிறிதுசாந்தியும், மகிழ்ச்சியும் — வெற்றியும்கூடக் கிட்டிவிட்டன. இடையிடையே கலகலவென்று பெருந்தொனியோடு சிரித்துக்கொண்டார்.

சிலதினங்கள் கழிந்தன. ஒருநாள் வழமைபோலடக்றர் இராப்போசனத்துக்கு அமர்ந்தார். புஷ்பா உணவுபரிமாறிக் கொண்டிருந்தாள். "ஐயா! ஐயா! என்புருஷனைக் காப்பாற்றுங்கள் என்று அலறிக்கொண்டு ஓர்ஏழைப் பெண் அங்குஓடிவந்தாள். கண்களில் நீர்தேங்கி வடிந்துகொண்டிருந்தது. கோபவெறியோடு டக்றர் அந்தஏழையைத்துரத்தினார். "நேரகாலம்தெரியாமல் நாய்போலவந்து குரைக்கிறாள்" என்றுகடிந்தார்.

"ஐயா! அவர் சாகக்கிடக்கிறார். எனக்கும், என்னுடைய ஐந்துகுழந்தைகளுக்கும் அவரைவிட ஒருகதியும் கிடையாது துரையே" என்று டக்றரின்காலில் வீழ்ந்துகிடந்தாள் அந்த ஏழை. புஷ்பாவின் இருதயம் வெடித்துவிட்டது என்பதைக் கண்கள்தெரிவித்தன. டக்றர் அணுவளவும் விசனமின்றி அங்கே உட்கார்ந்திருந்தார். புஷ்பாஇரக்கத்தோடு அந்த ஏழைக்கு உதவியளிக்கும்படி கலங்கும் கண்களால் தனதுகணவனை வேண்டினாள். "நீ என்கருமங்களில் தலையிடுவதை நான்அனுமதிக்கமாட்டேன்; கூட்டுக்குள்ளேயிருக்கும் பறவைக்கு வெளியேஇருக்கும் வெப்பதட்பம்தெரியுமாபுஷ்பா?" என்று கத்தினார்டக்றர். கணவனின் கோபக்கனலைக்கண்டு புஷ்பா பனிக்கட்டியாக உறைந்துநின்றாள்.

உடனேடக்றர்: "நூறுரூபாகொடு, உன்புருஷனைப்பிழைக்கவைக்கிறேன்" என்று அந்தஏழையைப் பார்த்துக் கூறினார் கண்டிப்போடு.

நூறுரூபா — நூறுரூபா — நூறுரூபா—அவள்சிந்தனையே சுக்குநூறாகச் சிதறியது. "ஐயா! நான் நூறு சதத்துக்கும் பாதையில்லாத ஏழை; என்மேலிரங்குங்கள்; என்புருஷனுக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள்; அவர் பிழைத்ததும் உங்கள்செலவை உழைத்துக் கொடுத்துவிடுவார்; உங்களுக்குக் கோடிபுண்ணியம் உண்டுஎன்று அழுதழுது முறையிட்டாள்.

"புண்ணியத்தால்வயிறுநிறையாது, போடி வெளியே" என்ற சொற்கள் வெடிபோலக்கிளம்பின டக்றரிடமிருந்து. புஷ்பா சிலைபோலநின்றாள்.

சிறிதுநேரத்தால், அந்தஏழை எழுந்தோடினாள். நூறுரூபாக்களோடு திரும்பிவந்தாள்; டகறரிடம் அந்தப் பணஉறையை நீட்டினாள். அவருக்கு உள்ளமும், உடலும் குளிர்ந்தன. உடனே ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டார் உற்சாகத்தோடு.

இரவு பத்துமணி. டக்றர் வீட்டுக்கு வந்தார். ஆயாசத்தோடுவந்தவர் சோபாவிற்சாய்ந்தார். மேசைமீது வைத்திருந்த பணஉறையை ஆவலோடு பிரித்தார். நூறுரூபாநோட்டைக்

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

## தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

### களிகூர்ந்தகாரணிக்கம்

### 4-ம் காரணிக்கம் — 6-ம் பிரியதத்தம்

### 36. தேவபாலகனை ஏந்துதல்

காணிக்கைச் சடங்கு நிறைவேறியதும் சூசைமாதவனும், தேவதாயும் ஆலயத்தினின்றும் புறப்பட ஆயத்தமாகின்றனர். அந்த வேளையிலே சிமியோன்முனிவர் அவர்கள்முன் எதிர்ப்படுகின்றார். தேவதாயின் திவ்வியகாத்தே வீற்றிருக்கும் தேவபாலகனை இமைகொட்டாது கண்ணேக்கியபடியே சிறிதுநேரம் மெய்மறந்து நிற்கின்றார். இஸ்பிரீத்துசாந்துவினுல் நிரப்பப்பட்டிருந்த அவருக்கு அவர்கள் இன்னார்என்பது நன்கு புலனுகிவிடுகிறது. அக்கணத்திற்றானே......

"விண்டன மலர்போல் விண்ட
விருப்பினுன் வெய்தென்(று) எய்தி

நன்றாகமலர்ந்த (விண்டன) தாமரைமலர்போல மிக்கஆசைகொண்டிருந்த (விண்டவிருப்பினுன்) சிமியோன்விரைவாகவந்து ஆலயத்திற்சேர்ந்து,

"கண்டனன் கனிந்த கண்ணுல்
கறவைகாண் கன்றின் வெஃகி

களிப்புமிகுந்த(கனிந்த) தன் கண்களினுல் தேவதிருக்குமாரனை ஏறிட்டுப் பார்த்தனன். அங்ஙனம் பார்த்தஅளவில் தாய்ப்பசுவாகிய கறவையைக் கண்ட கன்றைப்போல விரும்பித்தாவி (வெஃகி)

"உண்டன உருவிற் குன்று
உயர்குணத்(து) இறைவன் தாளை

எடுத்துக்கொண்ட மனிதஅவதாரத்தில் (உண்டனஉருவில்) குறைவுபடாமல் உயர்ந்திருக்கும் (குன்றுஉயர்) தேவசுபாவத்தின் மாட்சிமையை அறிந்து (குணத்து) அத்தேவகுமாரனது அழகியபாதங்கள் இரண்டையும்,

"கொண்டனன் தலையிற் சூடிக்
குணக்கடல் குளித்துத் தாழ்ந்தான்."

தலையின்மேல் ஓர்அணியாகச் சூடிக்கொண்டு அப்பாலகனது மாட்சிமைக் குணமாகிய ஓர்கடலினுள்ளே முழுகினுற்போல மகிழ்ந்து வணங்குகிறான்.

அங்ஙனம் தொழுதுவணங்கியும் தன் மனத்திலேகொண்ட இன்பத்திற்குறையாமல் மீண்டும்மீண்டும் பாதங்களைத் துதிக்கிறான்; துதித்துத் தன்கண்ணீர்ப் பெருக்கால் புனலாட்டுகிறான். பின்னர் அருளாகிய செழித்த ஆடையினுல் தடவித் துடைக்கின்றான்; துடைத்துத் தன்கண்களாகிய இரண்டு கைகளினுலும் திவ்வியபாலகனுடைய திருமுகமண்டலத்தின் பேரழகுமுழுவதையும் வாரி உண்ணுகின்றான். உண்டு தன்அன்பாகிய இனியசுவையோடு பழுத்தபேரின்பமாகிய கனியை மிகுதியாயுண்டு அவ்வின்பத்திலே திளையாநிற்கின்றான். அதாவது:

"தொழுதுதன் உளத்(து)இன்(பு) ஆற்றுத்
திணையடி மலரை ஏற்றி
அழுதுதன் கண்ணீர் ஆட்டி
அருட்கொழுந் துகிலின் நீவி
முழுதுதன் கண்கள் கையால் [வத்து
முகக்கவின் முகந்(து) உண்(டு) ஆர்
இழுதுதன் சுவையிற் காய்த்த
இருங்கனி சுவைத்து விள்ளான்"

என்று சிமியோன்முனிவர் அன்றடைந்த பேரின்பப் பெருந்திளைப்பை முனிவர் அழகுறப்பாடியிருக்கிறார்.

இவ்வாறு சிமியோன்முனிவர் தேவதாயின்காத்தே எழுந்தருளியிருக்கும் திவ்வியபாலகனை வணங்கி வாழ்த்துகிறார். அவரது தணியாக்காதலைக்கண்ட தேவதாயாரும் தன்திருக்குமாரனை அவர்காத்தே அளித்து நிற்கிறார். உடனே சிமியோனும்......

"பார்உடம்(பு) உயிராய் வந்த
பரமனைக் கரத்தில் ஏந்தி

பூவுலகமாகிய உடம்புக்கு ஓர்உயிராக அவதரித்துவந்த தேவபாலகனை (பரமனை) கைகளிலே ஏந்திக்கொண்டு,

"ஈர்உடம்(பு) உயிர்ஒன் ருக
எழுந்தஅன்(பு) உவப்பிற் பொங்கிச்

இரண்டு உடம்புகளுக்கும் உயிர் ஒன்றேயாம்படி உண்டான அன்பின் தன்மை (எழுந்தஅன்பு) களிப்பினுல் மிகுதியாகி,

"சேர்உடம்(பு) இரண்டொன் ருகச்
சேர்த்துபு தழுவி......

சேர்ந்தஇரண்டு உடம்புகளும் பிரிவின்றி ஒன்றாய்த் தோன்றும்படி (ஒன்ருக) அத்திவ்வியபாலகனை மார்போடு இறுகத்தழுவி (சேர்த்துபுதழுவி)

"..........................அன்பின்
நேர்உடம்பு எழீஇ வீடுற்ற
நிலைமையில் பாட லுற்ருன்"

தன் அன்புமேலெழுந்து உயர்வதுபோல (அன்பின்நேர்) தன்உடம்பும் எழுந்தேறி மோட்சவீட்டைச் சேர்ந்திருக்கும் தன்மையாகப் பாடத்தொடங்குகிறான்.

"பாருடம் புயிராய் வந்த
பரமனைக் கரத்தி லேந்தி
யீருடம் புயிரொன் ருக
வெழுந்தவன் புவப்பிற் பொங்கிச்
சேருடம் பிரண்டொன் ருகச்
சேர்த்துபு தழுவி அன்பி
நேருடம் பெழீஇவீ டுற்ற
நிலைமையிற் பாடலுற் ருன்."

## நாளு சங்கதிகள்

— பாத்திமா திருசேத்திரத்திலே தொமினிக்கன்சபையார் அடுத்த வைகாசிமாதம் 9-ந் திகதிமுதல் 13-ந் திகதிவரையிலே செபமாலை மகாநாடு ஒன்று கூடவிருக்கின்றார்கள். செபமாலைப்பக்தியை விருத்திசெய்வதற்கான வழிவகைகள் இந்தமகாநாட்டிலே ஆராயப்படவிருக்கின்றன.

— சோவியற்அரசின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலே பிரசுரமாகியிருக்கும் கலைச்சொற்களின் புதிய அகராதியிலே "கடவுள்" என்றசொல் நீக்கப்பட்டுள்ளது. பரிசுத்தபாப்பரசரைக்குறித்து இரண்டேயிரண்டு வரிகள்மாத்திரம் காணப்படுகின்றன. ஆனுல், கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியின் ஜனதிபதியான வில்ஹெல்ம் பியெக்என்பவனைப்பற்றி 32 வரிகள் காணப்படுகின்றன.

— அடுத்தவைகாசிமாதம் முத். பத்தாம்பத்திநாதர் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படுமுன் அவரது சீவியவரலாற்றை அடிப்படையாகக்கொண்டு "கருதினுல்மாரின் அந்தரங்க திருக்கூட்டம்" எனும் நாமத்தால்அறியப்படும் சினிமாப்படம்ஒன்று வெளியாகவிருக்கிறது. இதிலேஅவர் 1903-ம் ஆண்டு பாப்பரசராகத் தெரியப்பெற்றபோது நிகழ்ந்த கருதினுல்மாரின் திருக்கூட்டகாட்சிகள் விசேஷஇடம் பெற்றுள்ளன.

— மடகஸ்கார்தீவிலே மஜன்காநகரின் விக்கார்அப்போஸ்தலிக்குவாகவும், மெற்றெலொப்போலிநகரின் மகிமைமாத்திரையான மேற்றிராணியாராகவும் ஓர்பிரான்சியரான மகாவண. ஜோண்டேவிற் சுவாமியார் தெரியப்பெற்றிருக்கின்றார். இவர் ஓர்குடும்பத்தில்பிறந்த 14 பிள்ளைகளில் ஒருவர். இவருடையசகோதரர்இருவரும் குருமாராய்இருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டுச் சகோதரரின் குருபதவி

இங்கிலாந்திலே ஸ்றெற்றன் நகரிலுள்ள மொண்போர்த் குருமார்சபையைச்சேர்ந்த அர்ச். மரியநாயகியின் குருமடத்திலே சென்ற பங்குனிமாதம் 19-ந் திகதி குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றவரான வண. டெஸ்மான்ட் ஓ'ஹறுசுவாமியாரின் சகோதரர்நால்வர் ஏலவே குருப்பிரசாதிகளாய் இருந்துவருகின்றனர். மற்றும்மூன்று சகோதரர் குருப்பட்டத்துக்குப் படித்துவருகின்றனர். யோக் நகர் அர்ச். வில்பிறெட்டின் கோவிலில் தொண்டாற்றும் வண. பற்றிக் ஓ'ஹறு, மிட்டிள்ஸ்பறோவில் பணியாற்றும் வண. பிரான்சிஸ் ஓ'ஹறு, அமெரிக்கஐக்கியதேச அலபாமாவில் சேவையாற்றும் வண. அல்பன் ஓ'ஹறு, வண. ஜோண் ஓ'ஹறு என்பவர்களே இவரின் குருசகோதரர்கள். மற்றோர்சகோதரரான சின்ரேர்சியன் சபையைச்சேர்ந்த வண. மிக்கேல் ஓ'ஹறு பிறதர் மெல்லிபொண்ற் ஆச்சிரமத்திலே இன்னுஞ்சிலவாரங்களில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்படவிருக்கின்றார். ஏனைய இரு சகோதரரிலும் வண. கார்வின் ஓ'ஹறுபிறதர் டபிளின் நகரிலும், வண. யோசெவ் ஓ'ஹறு பிறதர் சட்ரன்நகரிலும் குருப்பட்டத்துக்குப் படித்துவருகின்றனர். இவர்களின்பெற்றோர் அயர்லாந்திலே பாங்கொங்என்னுமிடத்தில் வசித்துவருகின்றார்கள்.

---

### அரசன்அன்று—தெய்வம்நின்று

ஹங்கேரியதேச கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவரைக் குற்றவாளியாகக் காணுவதில் முதன்மையாகநின்று பங்குபற்றியஇருவர் தேசதுரோகமும், சனவிரோதமுமான குற்றச்சாட்டின்பேரிலே ஹங்கேரிய கம்யூனிஸ்த அரசாங்கத்தால் அந்தரங்கமாக விசாரணைசெய்யப்பட்டுச் சிறைத்தண்டனை பெற்றிருக்கின்றார்கள். இவர்களில் காபர் பீற்றர்என்பவன் சீவபரியந்த சிறைத்தண்டனை பெற்றுள்ளான். அரசியற் பொலிசரின் தலைவனான இவன் கருதினல்ஆண்டவர் விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியம் அளித்தவன். மற்றவனான ஜியுலா டெக்ஸ்என்பவன் ஒன்பதுவருட சிறைத்தண்டனை பெற்றுள்ளான். இவன் 1948-ம் ஆண்டு கருதினல்ஆண்டவர் கைதுசெய்யப்பெற்று விசாரிக்கப்பட்டபோது, நீதிமந்திரியென்றமட்டில் இவனே தலைமைவகித்திருந்தான். இற்றைக்கு ஓராண்டின்முன் இவன் கைதுசெய்யப்பட்டான. கருதினல்மின்ட்சென்ரி ஆண்டவர் மீது பாரிக்கப்பெற்ற அதேகுற்றச்சாட்டே—அதாவது "அமெரிக்க ஐக்கிய தேசத்திற்காக ஒற்றராகவிருந்து உளவுபார்த்தார்" என்ற குற்றச்சாட்டே இவன்மீதும் சுமத்தப்படலாயிற்று.

---

## அந்தீஸின் கிறீஸ்துநாதர்

ஓர்சமாதானபிணையாக ஆர்ஜென்ரின-சிலிஎனும் இருநாடுகளுக்கும் இடையிலுள்ள அந்தீஸ்மலைகளிலே நிறுவிநிற்கின்ற "ஆந்தீஸின் கிறீஸ்துநாதர்" சுரூபமானது ள்தாபகமான ஐம்பதாம்ஆண்டு நிறைவுவிழா இருநாடுகளிலும் சென்றபங்குனிமாதம் ஒருவாரமுழுவதும் கொண்டாடப்படலாயிற்று. புவெனேஸ் அயேர்ஸ் நகரிலே ஆடம்பர ஞானவைபவங்களுடன் "தெதேயும்" எனும் தேவதோத்திரகீதம் பாடப்பட்டது. இந்தச்சுரூபத்தை ஸ்தாபிப்பதிலே முதன்மை வகித்திருந்த மென்டோசாநகரின் பொனவென்ரே மேற்றிராணியாரால் அதன்முன்பாக விசேஷ ஆராதனைவைபவங்கள் நடந்தேறின. இந்தச்சுரூபம் 50 தொன் நிறைகொண்டது. 12,750 அடிஉயரத்திலே நிறுவிநிற்கின்றது.

---

### இருபதுலட்சம் கைச்சாத்துகள்

டபிளின்நகர் வாசியான 34 வயதுடைய தோமஸ் நோலன் என்பவர் அகில - அயர்லாந்திலும் சேகரித்த ஐம்பதினயிரம் பேர்களின் கையொப்பங்கள் அடங்கிய ஓர்கட்டு அப்பியாச புத்தகங்களைக் கொண்டிருக்கிறார். "செபமாலைசொல்வதற்கென்று ஓர்சேனையை நாம் கொண்டிருந்தோமானல் உலகத்தையே நாம் வெற்றிகொள்ளமுடியும்" என்று காலஞ்சென்ற பதினொராம் பத்திநாத பாப்பானவர்கூறிய சுலோகத்தையே இவர் தனது விருதுவாக்கியமாகக்கொண்டு செபமாலைச்சேனையில் ஆட்களைச்சேர்த்து அவர்களின கையொப்பங்களைப் பெற்றுவருகின்றார். இந்தநோக்கமாக இருபது லட்சமகையொப்பங்களைப் பெறவேண்டுமென்பது இவரின் நோக்கமாகும்.

---

### ருஷிய சமயவிரோத இயக்கம்

"சோவியற்ருஷியாவிலே கம்யூனிஸ்த இளைஞர்கள்சங்கத்தின் சமயவிரோதஇயக்கம் மிக மோசமாகப் பலங்குன்றியிருக்கிறது; சிலஇடங்களிலே அது முற்றாக நிற்பாட்டப்பட்டுவிட்டது" என்று கிறெம்லினிலே சோவியற் அதிகாரிகளின் தேசியகூட்டம்ஒன்றில் அச்சங்ககாரியதரிசியான திரு ஏ. என். ஷிலெப்பின் என்பவர் புலம்பியிருக்கின்றார். சமயமானது, ருஷியஇளைஞர்களிடையே உண்டுபண்ணிவரும் தீமைக்கேதுவானகாரியங்களைச் சில தலைவர்கள் குறைத்துமதிப்பிடுகின்றார்கள்; அதனல் ருஷிய இளைஞர்களில்அநேகர் சமயகொள்கைகளுக்குப் பலியாகின்றார்கள்என அவர் முறையீடு செய்திருக்கின்றார்.

## பாரிய கத்தோலிக்க குடும்பம்

இங்கிலாந்திலே மிட்டிள்ஸ்பறோவில் பதினறுஅறைகளைக் கொண்ட ஓர் பாரியமனையிலே தகப்பன், தாய், பிள்ளைகளாய்ப் பதினெட்டுப் பேரைக்கொண்ட ஓர்பாரிய கத்தோலிக்ககுடும்பம் வசிக்கின்றது. இவர்களிலே தகப்பனர் 43 வயதுடையவரான பிறெட் ஸ்ரொக்கெல்ட். தாயாரின்நாமம் பெறில். பிள்ளைகள் — பிறெட் (வயது 20) இரட்டைப்பிள்ளைகளான கெவின் (19) தெரேசா (19) ஜெரூட் (18) கிறிஸ்ரோபர் (16) அந்தோனி (15) ஜூடித் (14) சூசன் (13) யோசெவ்வின் (11 அன்ட்று (9) பென்ரன் (8) நிக்கலஸ் (7) பெறில் (6) இரட்டைப்பிள்ளைகளான பார்பறு (4) ஜோண் (4) மரியேலூயிஸ் (3). மூத்தபுதல்வர் பிறெட் லண்டன் நகர கல்லூரிஒன்றிலே பொருளாதாரசாஸ்திர கிழ்ப் பட்டதாரியாகப் பயின்றுவருகிறார். இரண்டாவதுபுதல்வர் றோயல் ஆகாயப்படையிலே சேவையாற்றிவருகின்றார். மூன்றாவது புதல்வர் ஜெரூட் பகல்முழுவதும் தனது தந்தையாருடன் அச்சகவேலைகள் செய்துவருகின்றார். ஓய்வுநேரங்களில் மல்யுத்தம் பயின்றுவருகின்றார். பிரித்தானிய பாடசாலைப்பிள்ளைகளின் மல்யுத்தப்போட்டியிலே இவர் முதல்வெற்றியும் ஈட்டியிருக்கின்றார். ஓர்பிரதம அச்சகரான தகப்பனர் தனது பாரியகுடும்பத்தைச் சவரட்சணை செய்வதற்காக அதிக நேரப் வேலைசெய்யவேண்டியவராய் இருந்தபோதிலும் தனது இளையகுழந்தை நித்திரைபோகுமுன் குடும்ப செபமாலையை முதன்மைவகித்து நடத்துவதற்காக மாலையிலே நேரத்துடன் வீட்டுக்குத் திரும்புகின்றார்.

---

### ஆங்கிலம்பயிற்றிய ஆசிரியர்

பரிசுத்தபாப்பரசர் அப்போது ஈயூஜினி பச்செல்லியென அறியப்பெற்று, ஓர் பாலிய மாணவராயிருந்து றோமாபுரியிலே பிரபுகுலப் பிள்ளைகள்படித்துவரும் திருச்சபைச் சாஸ்திர கழகத்தில் கல்விபயின்றுவந்தபோது அவருக்கு ஆங்கிலபாஷையைப் பேசவும், எழுதவும் பயிற்றியவரான வண. ஆர்தர் கொக்ஸ் சுவாமியார் சமீபத்திலே தமது 92-ம் வயதில் இங்கிலாந்திலுள்ள வோர்திங்நகரில் காலஞ்செல்லலாயினர். சலிஸ்பறி பிரபு சிமாட்டியின் மருகரானசுவாமியார் 1910-ம் ஆண்டு ஓர்அங்கிளிக்கன்சபைப பாதிரியாராய் இருந்தபோது மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையிற் சேர்ந்துகொண்டபின் குருப்பட்டத்துக்குப் படிக்குமாறு றோமாபுரியிலுள்ள முன்சொன்ன சாஸ்திரகழகத்துக்கு அனுப்பிவைக்கப் பெற்றார். அங்கேஇவர் படித்துவரும்போது வருகாலப்பாப்பரசரின் ஆங்கிலஆசிரியராயிருந்துவந்தார். அதுமுதல் இருவரும் உற்றசிநேகிதர்களாயினர்.

# முத். பத்தாம் பத்திநாதர்

முத். பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளும்விஷயமாய் அடுத்த வைகாசிமாதம் 29-ம் 30-ந் திகதிகளில் நடந்தேறவிருக்கும் திருவைபவங்களுக்கான ஒழுங்குகளெல்லாம செய்யப்பட்டிருப்பதாக வத்திககான்பத்திரிகை தெரிவிக்கின்றது. இந்தஒழுங்குகளின்படி, பரிசுத்தபாப்பரசர் சம்பேதுருவானவர் மகாலயத்தின் உச்சப்படியில் அமைக்கப்படும் பலிபீடஸ்தானம் ஒன்றில் அமர்ந்து வைகாசிமாதம் 29-ந் திகதியன்றுசாயந்தரம் பத்தாம்பத்திநாதருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளுவார். மறுநாள் சம்பேதுருவானவர் மகாலயத்திலே கருதினல்ஒருவரால் நிறைவேறும் பெரியபாடற்பூசைக்குத் தலைமைவகிப்பார். திருப்பட்டவைபவத்தை நிறைவேற்றக்கூடியவகையிலே பாப்பரசரும் இப்போது தீவிரசுகம் பெற்று வருகின்றார். ஆனல், அத்திரு வைபவத்தின்பின் அவர் பேட்டியளிக்கும்விஷயமாய் இன்னும்ஓர்முடிவும் செய்யப்படவில்லை. தற்போது பாப்பரசர் தினமும் ஒருமணிநேரம் வரையிலே வத்திக்கான்தோட்டங்களில் உலாவிவருகின்றார். என்றாலும்அவர் தமதுவைத்தியரின் இடையறாத கண்காணிப்பிலேயே இருந்துவருகின்றார். அவரை வைத்தியர் தினமும் பார்வையிட்டுவருகின்றார்.

---

பாத்திமாவின்

### தீர்க்கதரிசனம்

பாத்திமாவின் அந்தரங்க தீர்க்கதரிசனம் பரிசுத்தபாப்பரசராலே திறந்துவாசிக்கப்பெற்று, மறுபடி 1960-ம்ஆண்டு பிரசித்தமாக வெளியிடுவதற்காகத் திரும்பவும்முத்திரையிட்டு வைக்கப்பட்டிருப்பதாகச் சமீபத்தில் வெளிவந்தசெய்தியைப் "பாத்திமாவின் குரலொலி" எனும்சஞ்சிகை கண்டித்து மறுத்திருக்கின்றது பவேரிய தேச கோன்ஸ்ரன்ரின் இளவரசர் எழுதிய புத்தகம்ஒன்றிலே, இந்தப் பரிசுத்தவருடத்தில் அந்தஇரகசிய தீர்க்கதரிசனத்தையும் தன்னேடுகொண்டு லூசியா கன்னியாஸ்திரி பரிசுத்தபாப்பரசரைத் தரிசிக்கவிருக்கிறாளென்று எடுத்துக்கூறப்பட்டுள்ளசெய்தி "முற்றுமே வீண்மனேகற்பிதம்" என்று அது தெரிவித்திருக்கிறது. பாத்திமாவிலே மூன்று பிள்ளைகளுக்கும் தேவதாயார் காட்சியளித்தபோது இந்தத் தீர்க்கதரிசனசெய்தி அவரால் அருளப்படலாயிற்று. அது எழுதப்பட வேண்டுமென்றும், 1960-ம் ஆண்டுக்குமுன் அதனை வெளியிடப்படாதென்றும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு!

**தேவமாதாவின் வணக்கமாதம்**

பிரதிவிலை: ரூபா 1 சதம் 50.

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்



சத்தியவேத
# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
சித்திரை மாதம் 29-ந் திகதி


## மாதாவின் வணக்கமாதம்

மாதாவின் புனிதவருடத்திலே மாதாவின் வணக்கமாதம் பிறக்கின்றது. உலகவானில் மீண்டுமேயுத்தமேகங்கள் திரளுகின்ற மிகநெருக்கடியான ஓர் சந்தர்ப்பத்திலே — ஜெனிவாவிலும், கொழும்பிலும் சமாதான மகாநாடுகள் கூடியிருக்கும் ஓர் நல்ல சந்தர்ப்பத்திலே சமாதானத்தின் இராக்கினியான மாதாவின் வணக்கமாதம் பிறக்கின்றது. அதனால் மாதாவின் விசேஷதயவையும், சலிகையையும் அதிகமாக இரந்துகொள்ள வேண்டிய ஓர் தருணத்திலே இந்தவணக்கமாதம் பிறக்கின்றது. புஷ்பங்களினமாதமென்று சிறப்பாக அறியப்படுகின்ற இம்மாதம் பரலோகத்திலிருந்து வரப்பிரசாதபுஷ்பங்கள் மழைபோலப் பொழியப்படும் மாதமாகும். ஏனெனில், இது வரப்பிரசாதங்களின் இராக்கினியாகிய நமதுபரலோக அன்னைக்கு நேர்ந்துகொள்ளப்பெற்ற மாதம். அதனாற்றான் மாதாவின் மக்களாகிய நாமெல்லாம் இந்தமாதத்திலே நம்மாலான மட்டும் அவரை விசேஷவிதமாக வாழ்த்தித் துதிக்கிறோம். கபிரியேல்சம்மனசானவரும், எலிசபேத்தம்மாளும் கூறிய மங்கள வார்த்தைகளாலே — ஆசிவார்த்தைகளாலே — அதாவது "பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே வாழ்க! கர்த்தர் உம்முடனே, ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே, உம்முடைய திருஉதரத்தின் கனியாகயயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவராமே" என்று அவரைப் போற்றி வணங்குகிறோம். நாம் செபமாலை சொல்லுந்தோறும் இத்தப்புகழ்மாலையையே அவரின் பாதமலர்களில் பன்முறைசாற்றுகின்றோம். அதனைத் தொடர்ந்து நமக்காக மன்றாடும்படி அவரை இரந்து வேண்டுகின்றோம். ஆம், மாதாவின்மாதம் நமக்கெல்லாம் ஆனந்தமயக்குப் ஓர்பாக்கியமான மாதம். "வந்ததே வணக்கமாதம் — மரியாயின் மாசமே — சந்தோஷமாய் வந்தெல்லோரும் — தாயாரைப் புகழ்வீரே" என்று அன்புபெருக, உள்ளமுருக, இன்பகரயாகப்பாடிக் கத்தோலிக்க உலக முழுவதும் ஆனந்தமுழக்கஞ் செய்து ஆர்வத்துடன் கொண்டாடுகின்றமாதம். இந்தமாதத்தில்வரும் ஒவ்வோர் நாளும் மாதாவின் மக்களுக்கு ஒவ்வோர்திருநாளாகும். இந்த மாதத்திலே அவர்களின் இல்லமும், ஆலயங்களும் மாதாவுக்குக் காண்பிக்கும் விசேஷ பக்திபற்றுதலால் அதிகமாகச் சிறந்துபரிமளிக்கும் ஒவ்வோர் பெருநாளாகும். நாம்மாதாவின் அன்பைப்பெற்று, அவர்நமது தஞ்சமாய் இருப்பாரானால், நாம் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை அவர்நமக்காகப் போராடுவாரானால், நாம் வெற்றியிலே அவநம்பிக்கைப்படவேண்டியதில்லை. அவர் நமக்காகப் பரிந்துபேசுவாரானால் நாம் கண்டடையாமற்போகும் நன்மையாதொன்றுமில்லை. அவர் நம்மை இரட்சிக்க மனங்கொள்வாரானால் நமது இரட்சணியத்தைப்பற்றிக் கிஞ்சித்தேனும் நாம் கலங்கவேண்டியதில்லை. மாதாவின்பிள்ளை ஒருபோதும் கெட்டுப்போகாது. நாம் இந்தவணக்கமாதத்தைச் சிறப்பாய்க் கொண்டாடுவது, மாதாவில்நாம்கொண்டுள்ள பக்திக்கு ஓர்உரைகல்லாகும். உலகிலுள்ளநாடுகள் கட்சிகட்சியாகப்பிரிந்து, யுத்தகலவரமுற்றுப்பயந்து, நிரந்தரசமாதானத்தைக் கண்டுகொள்ளும் வழிகாணாது கலங்கித் தவிக்கும் இந்தவேளை மாதாவைச் சரணடைந்து, அவரின் அடைக்கலத்தைத் தேடுவதே நாம்ஈடேறுதற்கான வழியென்க.

## சமாதான மகாநாடுகள்

கோறியாவின் எதிர்காலஅரசியலை ஒழுங்குபடுத்துவதற்கும், யுத்தத்தாலே பாழடைந்துவருகின்ற இந்தோசீனாவிலே சமாதானத்தைக் கொண்டுவருதற்குமாகச் சுவிற்சர்லாந்துதேச ஜெனிவா நகரிலே நான்கு வல்லரசு நாடுகள்உட்படப் பத்தொன்பது நாடுகளைச்சேர்ந்த வெளிநாட்டு மந்திரிமார்களின் மகாநாடொன்று சென்றதிங்கட்கிழமை கூடியிருக்கின்றது. மீளவும் யுத்தமொன்று மூண்டுகொள்ளுமோவென்று மீட்டுமோர்தரம் உலகமக்கள் பயப்பிராந்தியுற்றுக் கலக்கங்கொள்ளத் தொடங்கியிருக்கும் ஓர்சந்தர்ப்பத்திலே இந்தஜெனிவா மகாநாடு அவர்களுக்குச் சாந்தியைக்கொண்டுவருமா? அன்றேல் ஏமாற்றத்தைத்தான் உண்டுபண்ணுமா? முன்சொன்ன இருநாடுகளிலும் சமாதானத்தை உண்டுபண்ணுவதிலும், ஸ்திரமான அரசியலை ஏற்படுத்துவதிலும் இனிமேலில்லையென்ற பெரும்பிரயத்தனஞ் செய்து ஓர்கை பார்க்கிறதுதானென்று இம்மகாநாட்டில் கூடியிருக்கும் வெளிநாட்டுமந்திரிமாரெல்லாம் உறுதிகொண்டுள்ளனராம். ஆனால், வெற்றியடைதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டுமென்பதுபற்றி மேலைத்தேயங்களில் இன்னமும்சந்தேகந்தான். பிரித்தானிய, அமெரிக்க, பிரான்சிய, ருஷிய வல்லரசுகள்நான்கும் ஒன்றோடொன்று துவேஷமனப்பான்மையுடன் போட்டியிடும்போது — மறுநாடுகளைக் கட்டியா[illegible] மனங்கொள்ளாதிருக்கும்போது — ஒன்றுக்கொன்று நன்மனங்காட்டி விட்டுக்கொடுக்காதிருக்கும்போது — ஒன்றையொன்றுமடக்கக் கங்கணங்கட்டி நிற்கும்போது சமாதானம் கைகூடுவது எங்ஙனம்?

ஜெனிவாமகாநாடு இந்தவிதமான ஓர்சூழ்நிலையில்தான் கூடியிருக்கின்றது. இந்தோசீனாவில் யுத்தத்தை நிறுத்துவது எப்படி? யுத்தநிறுத்தம் செய்யப்பட்டுள்ள கோறியாவில் நிரந்தரசமாதானம் ஏற்படுத்துவதுஎப்படி? இவ்விருபிரச்சினைகளையும் தீர்ப்பதற்குக் கூடியிருக்கும் இந்தமகாநாட்டில், தாண்டிக்காய்க்குள் சனியன் புகுந்தவாறாய்க் கம்யூனிஸ்தசீனா குறுக்கிட்டுநிற்பதே பெருஞ்சிக்கலை உண்டுபண்ணுகின்றது. கம்யூனிஸ்தசீனாவை ருஷியாவுடனோ, அன்றேல் மேற்குவல்லரசுகள் மூன்றுடனுமோ சமத்துவமான ஓர் வல்லரசாக்க வேண்டுமென்று சோவியற்அரசு நிற்கின்றது. அதற்கு எட்டுணையுமே விட்டுக்கொடுப்பதில்லையென்று அமெரிக்கவரசு நிற்கின்றது. கம்யூனிஸத்தை மடக்குவதும், அதுபரவாமல் தடுத்துவைப்பதும் மேற்குநாடுகளுக்கு மாத்திரமல்ல, தென்கிழக்கு ஆசியநாடுகளுக்கும் பொதுவான ஓர்நோக்கமாகும். கோறியயுத்தம் நிறுத்தப்பட்டபோதிலும் இன்னுமே அது கம்யூனிஸ்தவடகோறியாஎன்றும், ஜனநாயக தென்கோறியாஎன்றும் இரண்டாகப் பிரிந்துபோயிருக்கிறது. கோறியாமுழுவதையுமே கம்யூனிஸ்தநாடாக்கிவிடுமாறு அங்கு யுத்தத்தை உண்டுபண்ணிய கம்யூனிஸ்தநாடுகளே பின்பு அதனை நிறுத்தியும்விடலாயின. இந்தோசீனாவிலும் யுத்தத்தைஉண்டுபண்ணியது, கம்யூனிஸ்தசீனாவின் ஆதரவைப்பெற்ற கம்யூனிஸ்தவியற்மினே. ஜெனிவாமகாநாட்டின் மூலம் இவ்விருநாடுகளிலும் சமாதானம ஏற்பட்டபின்னர் ருஷியா கிழக்குஐரோப்பியநாடுகளிற்போன்று தான் நடந்துகொள்வதில்லையென உத்தரவாதம்அளிக்குமா? அந்த உத்தரவாதத்தில் பிறநாடுகளுக்கு நம்பிக்கைபிறக்குமா?

நிற்க, ஜெனிவா மகாநாடு அங்குகூடியிருக்கும் இந்தவேளையிலே ஆசியபிரதமர்களின் — அதாவது இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இந்தோனேஷியா, இலங்கைஆதிய ஐந்துநாடுகளினதும் பிரதமர்களின் மகாநாடு நேற்றைத்தினம் கொழும்பிலே கூடியிருக்கின்றது. இந்தமகாநாட்டின் காரணகர்த்தா நமதுபிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களே. "ஆசியநாடுகளில் அந்நியநாடுகளின் ஆதிக்கம் கூடாது; அதேசமயத்தில் கம்யூனிஸம் பரக்கும்படியும் விடக்கூடாது" என்பதை ஆரம்பபீடிகையாகக் கொண்டே இந்தமகாநாட்டை இவர்கூட்டமுனைந்தார். ஆசியநாடுகளிலே இரண்டொன்று நீங்கலாக மற்றவைகள் சுதந்திரம் அடைந்துவிட்டன. ஆயினும், இவைகள் அடைந்து[illegible] சுதந்திரத்தை ருஷியாவிடம் கையளிக்குமாறு கம்யூனிஸ்தர்கள் எந்தநாட்டில்தான் அந்தரங்கமாகவும், பகிரங்கமாகவும் வேலைசெய்துவரவில்லை. இந்தக் கம்யூனிஸ்தர்கள் கால்ஊன்றிநிற்பது சுயநாடுகளில். ஆனால், கண்ணுங்கருத்தும் ஊன்றிநிற்பது ருஷியாவில். நமது பிரதமர் மாத்திரமல்ல, இந்தியபிரதமர் நேரு அவர்களும் இதைப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்திருக்கின்றார். பிரான்சும் இந்தோசீனாவுக்குச் சுதந்திரம்அளிக்க முன்வந்துவிட்டது. அதனால் ஆசியநாடுகளின் பொருளாதாரவளத்தைப்பெருக்கவும், அதன்மூலம் கம்யூனிஸத்தை அணைபோட்டுத் தடுக்கவும், பெற்றசுதந்திரத்தை நிலைநிறுத்தவும் வழிகாணுமானால், இந்தமகாநாடு வெற்றிகாணுமென்றே நம்பியிருக்கலாம்.



## சதாசகாயமாதா கோணம்

### "நான் ஓர் நிரீச்சுரவாதியானேன்"

நான் உமக்கு நன்றித்துதி சமர்ப்பிக்குமுன்னர் உம்மையும், உம்முடைய அற்புதச்செயல்களையும் அறியாதவர்கட்கு என்னைப்பற்றியும், நான்பட்ட பாட்டைப்பற்றியும் சிறிது கூறவிரும்புகிறேன்.

எனக்கு அடிவயிற்றில் ஓர் வியாதி உண்டாகி, நான் அனுபவித்த நோவும், உபத்திரவமும் தாங்கமுடியாதிருக்கவே, அதைச்சமாளிப்பதற்காக அபினிசித மருந்துவகைகளைப் பாவிக்குந்தீயபழக்கத்தில் ஈடுபட்டேன். உமது நோவனைகளைப்பற்றிப் பலபேர் எனக்கு எடுத்தோதி என்னையும் அவற்றிற் பங்குபற்றும்படி புத்தியூட்டினர். என் ஆற்றுக்கொடுமையால மூன்றுமாசங்களுக்குமேல் நீயேதஞ்சமென்று உம் மணடை ஓடிவந்தேன். நோவனைப் பத்திமுயற்சிகளிற் பங்குபற்றினேன். ஒருவிண்ணப்பமும் சமர்ப்பித்தேன். நான் உட்கொண்டுவந்த மருந்துவகைகளுக்கு நான்அடிமையாகி, அவை என்இரண்டாஞ் சுபாவமாகி நான் அவற்றின்பிடியிலிருந்து தப்பமுடியாது தவிக்கும்நிலைமையிலிருந்து என்னைவிடுவிக்கும்படி இரந்து மன்றாடினேன். என்மன்றாட்டுகள்எல்லாம் வீண்போல எனக்குத்தோன்றின. என்நிலைபரம் படுமோசமாகிக் கொண்டுவந்தது.

வேதவிசுவாசத்தையே விட்டுவிட்டேன். செபப் புத்தகத்தைக் கண்ணெடுத்துமுதலாய்ப் பார்க்கவெறுத்தேன். செபஞ்சொல்வதையும் முற்றாய்ஒழித்தேன். தேவதிரவிய அனுமானங்களைப் பெறுதுவிட்டேன். ஒரே வார்த்தையிற் சொல்லவேண்டுமாயின் நான் ஓர் நிரீச்சுரவாதியானேன்.

பின்பு என்நோய் கடுமைப்படுத்தியது. ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அங்கே எனக்கு "ஒப்பரேஷன்" அதாவது சத்திரவைத்தியசிகிச்சை செய்ய வேண்டுமெனச் சொன்னார்கள்.

எனது "ஒப்பரேஷன்" (சத்திரப் பிரயோகம்) கவலைக் கிடமானதும், அபாயமானதும்என்று வீட்டுக்காருக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டது. "ஒப்பரேஷன்" செய்தால் என்ன, செய்யாவிட்டால்என்ன, நான் உயிர் தப்புவது துர்லபமென்று டக்ரர்மார் தீர்க்கமாகக் கூறிவிட்டார்கள். ஆத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதவன் ‘ஆப்பல்’ கேட்டதுபோலச் செல்ல இடமின்றித் திரும்பவும் உமது தயவையே தேடினேன். சத்திரப்பிரயோகம் சித்திகாயாய் முடியவேண்டுமென உம்மிடம் இரந்துகேட்டேன். “ஆபத்து வேளையிற்தானா ஆண்டவன்?” என்று சிலர் கேட்கக்கூடும். அப்பேர்ப்பட்டவர்களும் உலகத்தில் உண்டுதான்!

தாயே! நின்சலுகையால் தப்பினேன். பிழைத்தேன். என் ஆரோக்கியத்தைக்கண்டு அதிசயப்படாதவர்கள் இல்லை. என் இருதயத்தின் அடி அத்திவாரத்திலிருந்து உமக்கு என் நன்றித்துதியைச் செலுத்துகிறேன். இதைவிட நான் வேறுஎன்ன செய்யமுடியும்! நீர் என்மட்டில் காட்டிய இந்த அற்புதசலுகையைக் கேட்கச் செவியுள்ளவர்கள் கேட்கட்டும்! உமது வல்லமையில் நம்பிக்கையில்லாதவர்கள் இனியாவது நம்பிக்கை வைக்கட்டும். இந்த விசுவாச பிரகடனம் உமதுமகிமையை எங்கும்பரப்புவதாக.

சதாசகாயமாதாவே! உமதுபிள்ளைகளாகிய எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

(கொழும்பு, அலெக்சாந்திரா பிளேஸ், 65-ம் இலக்கத்தை முகவரியாகக்கொண்ட பி. எச். காசிச்செட்டிபாரியார் “நோவனைப்புதினம்” எனும் ஆங்கிலபத்திரிகையிற் பிரசுரித்த நன்றித்துதியின் சாரம்)

# சுதேச வர்த்தமானம்

## புதியஆஸ்பத்திரிக் கட்டடம்

யாழ்ப்பாண அரசினர் பெரியஆஸ்பத்திரியுடன்சேர்த்து இருமாடிகளைக் கொண்டதாய்க் கட்டப்பெற்ற புதிய ஆஸ்பத்திரிக் கட்டடம வேலைமுடிந்து ஒன்பதுமாதங்களாகியும் இன்னுமே உபயோகிக்கப்படாமல் இருந்துவருகிறது. அதற்குக்காரணம் குடிதண்ணீர் முதலாம் வசதிகள் அமைக்கும்விஷயமாய்ப் பகிரங்கவேலைப்பகுதிக்கும், பிரதம பொதுச்சுகாதார எஞ்சினியரின் பகுதிக்குமிடையே ஏற்பட்டுள்ள அபிப்பிராயபேதமேயெனத்தெரியவருகிறது.

## 25 சதத்தால் நேர்ந்தகொலை

மாத்தறையைச்சேர்ந்த அற்றகாலை எனும் கிராமத்திலே சென்ற 20-ந்திகதி சிலர்ஓர்கூட்டமாகக் காட்ஸ்விளையாடினர். அதிலே குணசேன, பொடிஅப்புஹாமிஎனும் இருவருக்குமிடையே 25சதப்பங்கையப்பணத்தையிட்டுவாக்குவாதம் உண்டானதும ஏனையோர் அவர்களை விலக்கிவிடவே, இருவரும் அப்பாற்சென்றனர். ஆனால், பிந்தஇருவரும் திரும்பிவந்து விளையாட்டைக் கவனித்துக்கொண்டு நின்றபோது, பொடிஅப்புஹாமிஎன்பவன் குணசேனவின் பின்புறமாகச்சென்று அவன்முதுகில் ஓர்கத்தியால் குத்திவிட்டு ஓடித்தப்பிவிட்டானும். குணசேன பிந்தக்கண்டி ஆஸ்பத்திரியில் இறந்துபோயினன். பொடிஅப்புஹாமி பிந்தப்பிடிபட்டு விளக்கமறியலில் இருந்துவருகிறான்.

## ஒருவாய் புகையிலையால்

மினுவாங்கொடையைச்சேர்ந்த ஹீனதியனஎனுங்கிராமத்திலே 60 வயதுள்ள கரோஹாமிஎன்பவள் ஆறுபிள்ளைகளுக்குத் தாய். அவளுடையமகன் சென்ற 19-ந்திகதி அவளுக்கு நல்ல புகையிலைஒன்றை வெகுமதிபண்ணினான். அப்போது அவள்கணவன் ஒருவாய்புகையிலை தரும்படி அவளைக் கேட்க, அவள்மறுத்துவிட்டாள். அதைக்கவனித்தமகன் ஆத்திரங்கொண்டவனாய் அதையிட்டு அவளை வெகுவாகக் கடிந்துகொண்டான். தனதுமகன் அவ்விதம்தன்னைக் கடிந்து பேசினதையிட்டு கரோஹாமி பெரிதும் கவலையடைந்தவளாய் நியன்கலஎனும் நச்சுக்கிழங்கின் சாற்றைச் சாராயத்துடன்கலந்து குடித்துவிட்டாள். பின்னர் வாந்தியெடுக்கத் தொடங்கவே அவளை நீர்கொழும்புஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். அங்கேஅவள் எவ்விதசிகிச்சையையும் பெறமறுத்ததால் திரும்பவும் வீட்டுக்குக்கொண்டுபோகப்பட்டு, அங்கேஇறந்துபோயினாள்.

## கருப்பநீரிலிருந்து சீனி

பனம்பொருள் ஆராய்ச்சித்துறையில் பிரசித்திபெற்ற இந்தியநிபுணரும், தற்போது நீர்வேலியில் சஞ்சரித்துவருகிறவருமான திரு. ஏ. ரி. காசிஅவர்கள் இன்னும்சிலதினங்களிலே கருப்பநீரிலிருந்து வெள்ளைச்சீனி உற்பத்திசெய்யத் தொடங்குவார்போல் இருக்கிறது. அவருக்குத் தேவைப்படும் சகலவசதிகளையும் நீர்வேலிக் காந்தீயசேவாசங்கம் செய்துகொடுக்குமென்றும், சர்வோதய ஆச்சிரம மைதானத்திலே விரைவில் ஓர் சீனித் தொழிற்சாலை அமைக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

## பனம்பொருள் ஆராய்ச்சி

அகில – இலங்கைப் பனம்பொருள் உற்பத்திச்சங்கத்தின் அயரா முயற்சியால யாழ்ப்பாணத்திலேபனம்பொருள் ஆராய்ச்சி நிலையம்ஒன்று விரைவில் ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. பனாட்டு, பனங்கட்டி, கல்லக்காரம், ஒடியல் ஆகியவற்றிலே உள்ளடங்கியிருக்கும் சீவசத்து; அவுடதத்தன்மை, உணவைச்சீரணிக்கச்செய்யும் சக்திமுதலியவற்றை ஆராய்ந்து நிர்ணயிப்பிப்பதற்கே இந்தநிலையம்அமைக்கப்படவிருக்கிறது. மூன்றுமாதகாலம் பயிற்சிபெற்ற பனம்பொருள் பரிசோதகர்கள் ஆறுபேர் தற்போது யாழ்ப்பாணத்திலே கடமையாற்றி வருகின்றனர். இவர்களின் தீவிரமுயற்சியால் சமீபத்திலே பதினெட்டு ஐக்கியபனம்பொருள் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## மரணசங்கதி - சில்லாலை

சில்லாலைவாசரும், மாதகல் சஞ்சூசையப்பர் ஆங்கிலகலாசாலை அதிபருமான திரு. என். ஜேம்ஸ், பி. ஏ. அவர்களின் புதல்வரான செல்வன் விக்றர் ஜெயநாதன்என்பவர் எதிர்பாராதவிதமாய்த் தனக்குண்டான நோய் காரணமாகச் சென்ற 21-ந்திகதி புதன்கிழமை காலை கொழும்பிலே கிறுண்ட்பாஸிலுள்ள சொலமன் ஆஸ்பத்திரியில் காலஞ்சென்றாரெனும் துயரசெய்தியறிந்து பெரிதும் மனம்வருந்தலானோம். மரிக்கும்போது இவருக்கு வயது 18. இளமைமுதல் தேவபக்தி, குருபக்தியில்சிறந்து, பூசைப்பரிசாரகனாகத் தினமும் பூசைக்கு உதவிசெய்வதில் கருத்தாயிருந்த, தனதுகுணநடையாலும, கல்வியழகாலும் ஏனைய இளைஞர்களுக்கு ஓர் மேல்வரிச்சட்டமாக விளங்கியஇவர் கொழும்புசென்று சஞ்சூசையப்பர் கல்லூரியிலே உயர்தர கல்வி பயின்றுவந்தார். இவரது மரணத்தாலே ஊர்முழுவதுமே துயரத்தில் ஆழ்ந்தது. இவரின் பிரேதமானது மறுநாட்காலை 6 மணிக்குச் சில்லாலைக்குக் கொண்டுவரப்பட்டு, அன்று பிற்பகல் பலவிடங்களிலுமிருந்து உறவினர், சிநேகிதர் பெருந்திரளாகக் கூடியிருந்தசமுகத்திலே, இவரது பெரிய தந்தையாரும், யாழ்ப்பாணமேற்றிராசன புரோக்கியூறேற்றர் ஜெனறலுமான அதிவண. என். யோசெவ் சுவாமியவர்கள், சம்பத்திரிசியார் கல்லூரிப் பொக்ஷகர் வண ஏ. எஸ். சிங்கராயர், சில்லாலைக் கட்டளைக்குரவர் வண. எல். டெசி, மாதகல் கட்டளைக்குரவர் வண. எவ். றெனுட், வண. பி. நீக்கலஸ் எனும்குருப்பிரசாதிகள் சமேதராய்த் துக்கசங்கீதம்பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கச் சேமக்காலையிலே நல்லடக்கம் செய்யப்பட்டது. தங்கள் அருந்தவப்புதல்வரை இழந்து ஆற்றொணாத் துன்புற்றுவருந்தும பெற்றோர், மற்றும உறவினருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.



# மரியாயின் புனிதவருடப் பொது நிருபம்

(முன்தொடர்ச்சி)

## நாம் விரும்பும் விசேஷ நோக்கங்கள்

தற்கால நிலைமையை உத்தேசித்து, உண்மையாகவே, பரிசுத்தகன்னிகையின் வல்லபம்மிக்க பரிபாலிப்பையும், அடைக்கலத்தையும், பரிந்துபேசுதலையும்முன்னிட்டு நாம் வேண்டிக்கொள்ள வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு

முதலாவதாக, ஒவ்வொருவரினதும் வாழ்க்கைமுறையும் கிறீஸ்துவ பிரமாணங்களில் நிலைபெற்றதாக விளங்கத் தெய்வீக அருளைப் பெற்றுத்தரும்படி நாம் மன்றாடவேண்டும். ஏனெனில், நாம்முன்பு குறிப்பிட்டதுபோல் கிரிகைகள்இல்லாத விசுவாசம் செத்ததாகும். (யாகப்பர் II–20.) அன்றியும் யாதொருவன் புண்ணியவிருத்தியில் முதலில் தானே நன்முன்மாதிரிகையாய், மற்றவர்களுக்கு ஒரு மேல்வரிச்சட்டமாய் விளங்காவிடின் அவனால் பொதுவாழ்வுக்குஉகந்த நன்மையெதையும் செய்யமுடியாது போகும்என்பதும் உண்மையன்றோ!

வாலிபத்தின் அழகியமலரானது, உலகத்தின் அசுத்தகாற்றால் தீண்டப்பட்டு வாடிவதங்காமல், அந்தமலர் பழிபாவங்களில் வளர்ச்சியுறாது உதாரகுணம், குணசீலம், தூய்மை, மாசின்மை என்பவை அமைந்த வாலிபத்துவமலராக அலர்ந்து வளர்வதற்காகவும விசேடவிதமாக இரந்துகேட்டுக் கொள்ளவேண்டும். அதாவது வாலிபத்தின் தளராத மனோவேகத்தையும், தணியாத ஆர்வத்தையும் மட்டுப்படுத்தி, கள்ளங்கபடத்தை ஒழித்து, தின்மையானவழிகளில் ஈடுபடாமல் அழகு, தூய்மை, அன்பு, உயர்வு உள்ளவைகளை அது விரும்பவேண்டுமென்று வேண்டிக்கொள்வார்களாக.

மானிடப்பருவத்தில்—அதுவும்சிறப்பாக வயோதிபவேளையில் மக்கள் கிறீஸ்துவபுண்ணியத்திலும், திடனிலும் ஒளியாயிருக்க வேண்டும்என்று சகலரும் ஒருமித்து மன்றாடுவார்களாக. குடும்பசீவியம் வழுவாத பிரமாணிக்கத்தில் துலங்கவும், அது பிள்ளைகளின் சீரான புனிதவளர்ப்பால் செழித்தோங்கும்படியும், ஒற்றுமையிலும், ஒத்திணைப்பிலும், சமாதானத்திலும உறுதிப்படும்படியும் மன்றாடுவார்களாக.

கடைசியாக, வயோதிபர் தங்கள் வாழ்வின்முடிவு அணுகும்தருணம் அச்சம், மனக்குத்தல், அங்கலாய்ப்பு, நாணம்இன்றி, தங்கள்நீண்ட பிரமாணிக்கமான உழைப்புக்குக் கைம்மாறாகக் கிடைக்கும் வெகுமதியைக் கெதியில் பெறப்போகிறோம்என்ற உறுதியானநம்பிக்கையோடு நல்வழியில் கழித்த நல்வாழ்வின் தீங்கனியைக் குறித்து மகிழ்வுறும் நிலைமைக்கு வந்தாகவேண்டுமென்றும் மன்றாடுவார்களாக.

மேலும், பசியால் வருந்துபவர்களுக்குப் போசனமும், நெருக்கிடைப்படுபவர்களுக்கு நீதியும், நாடுகடத்தப்பட்டவர்களுக்குத் தங்கள் தாய்நாடு போய்ச்சேரும் பாக்கியமும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று தேவதாயைக் கெஞ்சிக் கேட்பார்களாக! இன்னும் இல்லிடம்அற்றோருக்கு இனியஉறைவிடமும், அநியாயமாகக் காவலிலும், சிறையிலும் அடைக்கப்பட்டிருப்பவர்களுக்குச் சுதந்தரவாழ்வும், சென்றமகாயுத்தம் முடிந்து இவ்வளவு காலம்கடந்தும் இரகசியமாய் மறியலில் அடைபட்டு வாடிப் பெருமூச்செறிந்து சுயஇல்லங்களை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் திரும்பிவர விடுதலையும் பெற்றுத்தரத் தேவஅன்னையை மன்றாடுவார்களாக. ஊனக்கண், ஞானக்கண் குருடர்களுக்குப் பரலோகஒளியின் ஆனந்தம்உண்டாகவும், பகை, வன்மம், வைராக்கியத்தால் பிளவுபட்டுத் தனித்திருப்பவர்கள் உண்மை, நீதி, பரஸ்பரசிநேகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சகோதரஅன்பு, ஒற்றுமை, சமாதானவாழ்வுமூலம் சீர்பெறும்படியும் தேவதாயை மன்றாடுவார்களாக.

வந்தனைக்குரிய சகோதரரே! நாம் விசேடவிதமாக ஆசிப்பதுஎன்னவென்றால், மரியாயின் புனிதவருடக் கொண்டாட்டவேளையில் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கஇருக்கும் செபங்கள்மூலம் எங்கள் இனியதாயாரும், பரிசுத்த இரட்சகரின் மாதாவுமான கன்னிகையின் பரிந்துபேசலால் இனிமேலெனினும் உலகம்முழுவதிலும் திருச்சபை விடுதலையடைய வேண்டுமென்பதே. தனக்குரிய சுயாதீனத்தை அது உலகத்தின் எந்தமூலையிலும் அனுபவிக்கக் கிடைக்கவேண்டும்என்று மன்றாடுவார்களாக. கத்தோலிக்கதிருச்சபையானது அதன் சரித்திரம் தெளிவாகக் கூறுவதுபோல்இச்சுயாதீனத்தை என்றும் மக்களின் நன்மையைப் பெருக்கவும், பிரசைகள், இராச்சியங்களிடையே ஐக்கியத்தைப் பேணிவளர்க்கவுமே பிரயோகித்துள்ளது. அது ஒருபோதும் கேட்டை விரும்பவும்இல்லை; பகைமையை உண்டுபண்ணவுமில்லை.

பொய்ப்பிரசாரங்களாலும், நிந்தை அவமானங்களாலும் திருச்சபையானது உலகின்பெரும்பாகத்தில் நெருக்கிடைப்படுவது யாவரும்அறிந்த விடயம்.

அநேகஇடங்களில் ஞானமேய்ப்போர் நீதியின்றிநாடுகடத்தப்பட்டோ, மறியற்சாலையில் தள்ளப்பட்டோ இருக்கிறார்கள்என்பதையும், தங்கள் ஊழியத்தைச் செவ்வையாகச் செய்யக்கூடாதவிதமாகத் தடுக்கப்பட்டோ வருவதையும் நீங்கள் அறிவீர்கள்.

இவ்வண்ணம் நெருக்கிடைப்படும் அதேஇடங்களில் தன்சொந்தப் பாடசாலைகளையும், ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகளையும் நடத்தத் திருச்சபைக்கு உரிமை மறுக்கப்படுகிறது கிறீஸ்தவ கொள்கைகளைப் பிரசித்தமாகப் போதித்துப் பாதுகாக்கஉதவியான சஞ்சிகைகள், பத்திரிகைகள், வேறுவித வெளியீடுகள் தடைசெய்யப் படுகின்றனஎன்றும், கிறீஸ்துவகொள்கைகளுக்கேற்க இளைஞர்களை வழிநடத்துவது தடுக்கப்படுகின்றதுஎன்றும் யாவரும் நன்குஅறிவீர்கள்.

(தொடரும்)

## நன்றியறிந்த தோத்திரங்கள்

எனது தொண்டையில் அபாயமான வருத்தம்கண்டு, வைத்தியர்களாலும் கைவிடப்பட்டு, மாறுமலிருந்தநோய் பரிசுத்த சதாசகாயமாதாவின் சலுகையால் குணமாகியது. நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

7-ம் நம்பர் வள்ளியம்மை
திரிகோணமலை

* * *

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், பரிசுத்த சதாசகாயநாயகியினதும், அர்ச். சூசையப்பா, அந்தோனியார், தெரேசம்மாள் இவர்களின் மன்றாட்டினாலும் எனதுமனைவி சேமமே குழந்தையைப் பெற்றெடுத்தாள். சருவேசுரனுக்குத் தோத்திரமும், அர்ச்சியசிஷ்டர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாவதாக.

யாழ்ப்பாணம் யோ. லோறன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## வாழ்விலே

**'ஜெயம்'**

1. மண்ணில் மலரும் மலரைப்போல்
மகனே! நீயும் வாடாதே
விண்ணில் ஒளிரும் மீனைப்போல்
விலைபெற்றே நீ பிரகாசி

2. தோன்றும் மறையும் மின்னல்போல்
தொடர்பற்றே நீ வாழாதே
ஊன்றும் கதிரின் ஒளியைப்போல்
உயர்வுற்றே நீ பிரகாசி

3. நீரின் முத்துக் குமிழைப்போல்
நீயும் தோன்றி மறையாதே
நீறுங் கடலின் முத்தைப்போல்
நிலைபெற்றே நீ பிரகாசி

4. குன்றும் குடத்துத் தீபம்போல்
குன்றிக் குன்றி வாழாதே
என்றும் குன்றின் தீபம்போல்
எழிலுற்றே நீ பிரகாசி

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

ஒரு வீட்டில் ஒரு மாமரம் நின்றது. அது நன்றாய்க் காய்த்திருந்தது. அடுத்த வீட்டிலிருந்த ஒரு பையன் காய்த்திருந்த மாங்காயைச் சாப்பிட ஆசைப் பட்டான். அந்த வீட்டார் மத்தியானம் சாப்பிடும் நேரம் பார்த்து, தோட்டத்துள் நுழைந்தான். மாமரத்தில் ஏறி ஒருபழத்தைப் பறித்துச் சாப்பிட்டான். வேறு காய்களையும் பறித்து மடியில் கட்டினான்.

மாமரத் தடியில் அரவங் கேட்டு நாய் குலைத்தது. வீட்டாரில் ஒருவர் ஓடிவந்து பார்த்த பொழுது, அடுத்த வீட்டுச் சிறுவன் மரத்தில் இருக்கக் கண்டார். கீழே இறங்கும்படி உறுக்கினார். உடனே சிறுவன் இறங்கினான். அவனைப் பிடித்து வீட்டிற்குக் கொண்டுபோய்: "ஏன் களவெடுத்தாய்? உன்னைப் பொலிசிலே கொண்டுபோய் அடைப்பிக்க வேணும்" என்றார். வேறொருவர்: "மரத்தோடு கட்டிவிட்டு, கண்ணுக்கு மிளகாய் போடவேணும்" என்றார். "காலிலே நெருப்பாற் சுட்டு, குறி வைத்து விட்டால் இனிமேல் வரமாட்டான்" என்றார் இன்னொருவர்.

அவ்வீட்டில் இருந்த கிழவி ஒருத்தி: "தம்பீ! களவு எடாதே; அது கடவுளுக்கு ஏராத துரோகம்; சிறு வயதிலே இப்படிப் பழகாதே" என்று புத்தி கூறினாள். அப்பொழுது சிறுவன்: "புளித்த மாங்காயுந் தின்று, இழித்த வாய்ப் பட்டமுங் கேட்டேனே" என்று நினைத்து வெட்கிப் பேசாமல் நின்றான்.

அந்தக் கிழவி சிறுவன் வைத்திருந்த மாங்காய்களை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்த பழுத்த பழங்கள் பத்துக் கொடுத்து அனுப்பினாள்.

சிறுவன் வெட்கமும், நன்றியும் நிறைந்தவனாய் வீடுதிரும்பினான். கிழவி நல்ல பாடம் படிப்பித்து விட்டாள்.

சகோதரங்களே, நீங்களும் களவெடுக்கப் போனால் இப்படி விரும்பிய அளவிற்குமேல் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. களவெடுப்பது குற்றம். தேவனுக்கு மாறானது. சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணா.

### அடிமையாயிருந்தவர்
## அர்ச்சியசிஷ்டரானார்

அன்று ஒருநாள் ஸ்கொத்திலாந்து தேசத்தில் ஒரு சிறுபையன் தெருவழியே சென்றுகொண்டிருந்தான். அவன் பெயர் பற்றிக். வீட்டுக்குப் போகும் வழியில் இரு பொல்லாத மனிதரைக் கண்டான். ஒருவன் கையில் ஒரு கத்தியுடன் நின்றான். அத்துடன் இருவர் கரங்களிலும் கயிறுகளும் இருந்தன. அவற்றைக் கண்டதும் பையனுக்குப் பயம் ஏற்பட்டது. திரும்பி மறுபுறமாக ஓடினான். அவர்களும் அவனைத் தொடர்ந்து சென்றனர். விரைவில் பையன் பிடிபட்டான். அவன் கைகளை அவர்கள் பின்புறமாகக் கட்டினர்.

தங்கள் வள்ளத்தில் அவனைத் தூக்கிப் போட்டனர். பற்றிக்கைப் போன்ற சிறு பையன்கள் அந்தவள்ளத்தில் நிரம்ப இருந்தனர். இவர்கள் எல்லாரையும் கொண்டு சென்று அயர்லாந்து தேசத்தில் உள்ள தனவந்தருக்கு அடிமைகளாக விற்றனர். பற்றிக்கும் ஓர் எசமானுக்கு விலைப்பட்டான். அவன் இச்சிறுவனைத் தன்மந்தைகளை மேய்க்கும்படி விட்டான். பற்றிக் தன்கடமைகளைச் செய்து கொண்டு, தன்னைக் காப்பாற்றும்படி தேவனை மன்றாடி வந்தான். ஆறு வருடங்கள் ஓடி மறைந்தன. ஒருநாள் இரவு பையன் நித்திரை செய்கையில் ஒரு சப்தத்தைக் கேட்டான்.

"எழுந்து ஓடிப்போ" என்றது ஒரு அசரீரி வாக்கு. இதைக் கேட்டதும் பையன் தைரியத்துடன் எழுந்து எசமானின் வீட்டை விட்டு ஓடினான். இரவும் பகலுமாக ஓடிஓடிச் சென்று கடற்கரையை அடைந்தான். அங்கே ஸ்கொத்திலாந்துக்குப் புறப்படும் தோணி ஒன்று ஆயத்தமாய் நின்றது.

"என்னையும் தோணியில் ஏற்றுவீரா?" என்று கேட்டான். "பணம் கொடுக்க வேண்டும்; ஏழைகளையும், பணம் தர முடியாதவர்களையும் ஏற்ற முடியாது" என்றான் தலைவன். பற்றிக் திரும்பிச் சென்று கடவுளைப் பார்த்து மன்றாடினான். சற்று நேரம் சென்றதும் அவனைத் தோணித் தலைவன் கூப்பிடும் சப்தம் கேட்டது. ஏறிச் சென்றான். மூன்று நாட்களின் பின் ஸ்கொத்திலாந்தை அடைந்தான். ஆனால், உணவு தேடுவது மிகவும் கஷ்டமாய் இருந்தது.

அவனுடன் சென்றவர்களில் ஒரு கிறீஸ்தவன் அவனைப் பார்த்து: "எங்களுக்கு உதவி செய்யும்படி தேவனை மன்றாடு" என்றான். "விசுவாசமாய் இருங்கள்; விரைவில் தேவன் உணவு அளிப்பார்" என்றான் பற்றிக். சற்று நேரஞ் சென்றதும் பன்றிக் கூட்டம் ஒன்று தெருவில் வருவதைக் கண்டனர். அவைகளைக் கொன்று தங்கள் எல்லோருக்கும் தேவையான அளவு உணவைப் பெற்றுக் கொண்டனர். பற்றிக் வீடு சென்றதும் எல்லோரும் அவனைச் சந்தோஷத்துடன் வரவேற்றனர். ஆனால், அயர்லாந்துக்குத் திரும்பவும் சென்று அதை ஓர் கத்தோலிக்க நாடாக்க வேண்டும் என்று பற்றிக் ஆசைப் பட்டார்.

விரைவில் ஓர்குருவாகி, மேற்றிராணியாராக அயர்லாந்துக்கு அனுப்பப் பட்டார். முப்பதுவருடம் செபத்தினாலும், பிரயாசையான வேலைகளினாலும் புத்தி பிரசங்கங்களினாலும் அயர்லாந்து தேசத்தை ஓர் கத்தோலிக்க நாடாக்கினார். இவர்தான் அயர்லாந்து தேசத்தின் அப்போஸ்தலரென அழைக்கப் படுகின்ற அர்ச். பத்திரிசியார்.

இவரது திருநாளைப் பங்குனிமாதம் 17-ந் திகதி கொண்டாடினோம்.

—எம். ஜே. எம்.

## இது அபகரித்த பணம்

"அம்மா! நான் கோவிலுக்குப் போகவேண்டும்; பாவசங்கீர்த்தனம் பண்ணி ஒருமாதம் ஆகிறது" என்றாள் மேரி. உடனே புறப்பட்டாள். ஆத்தும சோதனை செய்து கொண்டே போனாள். கோவிலை அடைந்ததும் பாடுபட்ட சுரூபத்தின் முன்பாக முழந்தாளிட்டாள். தன் பாவங்களுக்குப் பொறுதி கேட்டாள். மனஸ்தாபத்துடன் உறுதியான பிரதிக்கினை செய்து கொண்டாள், நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து வீடு திரும்பினாள்.

வழியில் தன்சிநேகிதி டெய்சியைச் சந்தித்தாள். இருவரும் இறைச்சிக் கடைக்குச் சென்றனர். இறைச்சியைக் கண்டதும் மேரியின் மனதில் ஓர் கொடிய சந்தேகம் உதித்தது. வீடு சென்றதும் அந்தச் சந்தேகத்தைத் தாயிடம் தெரிவித்தாள். "அம்மா! நான் சென்ற வெள்ளிக்கிழமை இறைச்சி சாப்பிட்டதைப் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்த மறந்து போனேன்."

"மகளே! அதைப் பற்றிச் சஞ்சலப் படாதே; அடுத்த பாவசங்கீர்த்தனத்தில் அதை மறந்துவிட்டதாகச் சுவாமியாரிடம் வெளிப்படுத்தினாற் போதும்" என்றாள் தாய். "அப்படியானால் நான் திவ்விய நன்மை பெறலாமா?" ஆம், மகளே! நீ வேண்டுமென்று அதை மறைக்காததால் அது மன்னிக்கப்பட்டது; வேண்டுமென்று நீ அதை ஒளித்திருந்தால் மன்னிப்பு அடைவதற்காக முன்னர் வெளிப்படுத்திய பாவங்களுடன் மறைத்த பாவத்தையும் வெளியிட வேண்டும் அல்லது மன்னிப்பு இல்லை.

இன்னும் ஒரு காரியத்தை மனதில் வைத்துக்கொள் மகளே! குருவானவர் யேசுநாதரின் ஸ்தானத்தில் இருக்கிறார். அவர் எங்கள் பாவங்களை ஒருவருக்கும் வெளிப்படுத்த மாட்டார். இதை விளக்க ஒரு சம்பவம் சொல்லுகிறேன் கேள்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளின் முன் செல்வவந்தனான ஒருகிழவனுக்கு அவஸ்தை கொடுக்க ஒரு குருவானவரை அழைத்தார்கள். கிழவன் பாவசங்கீர்த்தனம் செய்து முடித்தபின், தான் அபகரித்திருந்த ஒருதொகைப் பணத்தைச் சுவாமியாரிடம் கொடுத்து மனச் சமாதானமாய் உயிர் நீத்தான். குருவானவர் போனபின் பணப்பை குறைந்திருப்பதைக் கண்ட அவன் சுற்றத்தார் குருவானவரில் சந்தேகம் கொள்ளத் தொடங்கினர். அவர்தான் பணம் எடுத்திருக்க வேண்டுமென்று நினைத்து, அவரை வினவிய பொழுது, அவர் ஒரு மறுமொழியும் கொடுக்கவில்லை, நீதி விசாரணைக்கு ஒப்பித்தனர். தீர்ப்பு நடைபெற்றது. ஆயின் குருவானவரோ யாதுபதிலும் அளிக்கவில்லை. அதனால் பத்துவருஷ கடுஞ்சிறைத் தண்டனை பெற்றார்.

இரு வருடங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் ஓடி மறைந்தன. இறந்துபோன கிழவனின் பணப் பெட்டியில் ஓர் காகிதம் கண்டெடுக்கப் பட்டது. அதில் எழுதப்பட்டிருந்தது வருமாறு:

"இந்தப் பெட்டிக்குள் இருக்கும் ஒருதொகைப் பணம் வேறு ஒருவனிடம் அநியாயமாய் அபகரித்த பணம்."

அந்தக் கடிதத்தில் தெளிவாக எழுதப்பட்டிருந்த வசனத்தைக் கண்டதும் தாங்கள் செய்த பிழையை எல்லோரும் அறிந்து கொண்டனர். சுவாமியாரிடம் மன்னிப்புக் கேட்டனர். அவர் நடந்த சங்கதிகளைச் சொல்லித் தம்மைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால், அப்படிச் செய்வதினால் பாவசங்கீர்த்தன முத்திரையை உடைக்கிறவர் ஆவார். ஒருபோதும் எந்தக் குருவானவராயினும் பாவசங்கீர்த்தன இரகசியத்தை வெளியிடவே மாட்டார். இதை மனதில் வைத்துக்கொள்.

மறியலில் இருந்த குருவானவர் மகிமையுடன் சுற்றவாளியாக விடுதலையடைந்தார். தேவன் தமது தாசரை அதிசயமான விதமாய்க் காப்பாற்றினார்.

—M. J. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானே நல்ல மேய்ப்பன்

அன்று ஒருநாள் யேசுவைச் சனங்கள் சூழ்ந்து கொண்டு அவருடைய பிரசங்கத்தை ஆவலுடன் கேட்கக் காத்திருந்தனர். பரிசேயரும் அவர்கள் நடுவில் உட்கார்ந் திருந்தனர். யேசு வழக்கம்போல் தமது பிரசங்கத்தைத் தொடங்கினர்.

"நானே நல்ல மேய்ப்பன். நான் என் ஆடுகளுக்காக என் பிராணனைக் கொடுக்கிறேன். கூலிக்காக மேய்க்கிறவன் ஆடுகள் தனக்குச் சொந்தம் இல்லாததினால் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டுவிட்டுத் தப்பி ஓடுவான். அப்போது ஓநாய் ஆடுகளைப் பிடித்துக் கொல்லும்.

ஆனால், நான் நல்ல மேய்ப்பன். என்பிதா என்னை அறிவது போலவும், நான் என் பிதாவை அறிந்திருக்கிறது போலவும் நான் என் ஆடுகளையும் அறிவேன். என் ஆடுகளும் என்னை அறியும். இந்தப் பட்டியைச் சேராத வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும். அவைகளும் என்குரற்சத்தத்தைக் கேட்கும். அப்போது ஒரே ஆட்டுமந்தையும், ஒரே மேய்ப்பனுமாயிருக்கும் என்றார்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

# உத்தம தாய் இருந்தால்

ஒருநாள் ஓர் வயோதிப சந்நியாசி தமது மடத்தில் உள்ள உடன் சந்நியாசிகளுக்கு ஊதாரிப் பிள்ளையின் உவமையை வாசித்துக் கொண்டு இருக்கும் பொழுது அங்கு இருந்த ஒருவர் சொன்னார்: "இது ஓர் அருமையான சரித்திரம்; குடும்பத்தில் உள்ளவர்களை நன்கு சித்திரிக்கிறது; கதையில் அன்பும், கனிவும் உள்ள தகப்பன் உண்டு; யோசனை அற்ற துணிவு உள்ள வாலிபன் உண்டு; பொறுமை கொள்ளும் மூத்த சகோதரன் உண்டு; ஆனால், ஒருபெரிய குறையும் உண்டு; கதையில் தாய் இல்லை" என்றார்.

அதற்கு அந்தக் கிழச் சந்நியாசி சொல்லுவார்: "சகோதரனே! இப்பிள்ளைகளின் தாய் உயிருடன் இருந்தால், அந்த இளையவன் வீட்டைவிட்டு வெளியேறி யிருக்கமாட்டான்."

* * *

ஒரு வாலிபன் செய்த குற்றத்திற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தான். அவன் கழுமரத்துக்குப் போகும் வழியில் அவனுடைய தாய் அவனைக் காணுவதற்குக் காத்துக் கொண்டிருந்தாள். அவன் தாயைக் கண்டாலும் ஒருவிதஉணர்ச்சியும் அற்றவன்போல் நின்றான். தாய் அவனைக் கட்டி முத்தமிட்டாள். பின்னர் வேறு பேச்சின்றி அவன் கழுவேறச் சென்றான். தன்னுடன் வந்துகொண்டிருந்த குருவானவரைப் பார்த்து: "சுவாமி, என் தாய் என்சீவிய காலத்தில் எனக்கு அன்பு காட்டியது இதுவே முதல் முறையாகும்" என்றான்.

— எம். ஜெயம்

## யேசுநாதரின் வேறொருபெயர்

| | |
|---|---|
| 1-ம் எழுத்து | இருளில் உண்டு.<br>ஒளியில் இல்லை. |
| 2-ம் எழுத்து | வரவில் உண்டு.<br>செலவில் இல்லை. |
| 3-ம் எழுத்து | கூட்டலில் உண்டு.<br>கழித்தலில் இல்லை. |
| 4-ம் எழுத்து | சற்குணத்தில் உண்டு.<br>துர்க்குணத்தில் இல்லை |
| 5-ம் எழுத்து | அகலத்தில் உண்டு.<br>நீளத்தில் இல்லை. |
| 6-ம் எழுத்து | உயர்வில் உண்டு.<br>தாழ்வில் இல்லை. |

வே. சாமுவேல்
உரும்பிராய்

இரட்சகர்.

# பணக்காரன் அல்லது பரமஏழை

காலத்தின் மாறுதலுக்காக வானத்தின் ஞாயிறு ஞாலத்தின் மேற்றிசையில் மறைந்தான். அவன் மறைவுகுறித்து அவனியோருக்கு ஆறுதல் கூற வந்தான் அம்புலி. மக்கள் யாபேரும் வெண்ணிலாவின் தண்ணொளியில் தத்தம் படுக்கைகளை அமைத்தனர். உழைத்து அலுத்த அவர்கள் உலகில் காணும் சாந்திதான் என்ன?

இரவு 9 மணிக்கு அவ்வூரில் நிசப்தம் பரவியது. அமைதி தந்த அந்நிலாவொளி அமலராசனுக்கு மட்டும் ஆறுதல் அளிக்காதது ஏனோ?

இறுகப் போர்த்துப் பார்த்தான். இரு கண்களையும் மூடிப் பார்த்தான். பயன் இல்லை. நித்திராதேவியும் அவனை அணைக்க மறுத்தாள். புரண்டு புரண்டு படுத்தும் பொழுது போனதாகக்காண வில்லை. பாவம், கரையிலாக் கடலின் அலைபோல அவன்மனம் தத்தளித்தது. மானமாக வாழ மார்க்கம் இல்லாத ஒருவன் மானில வாழ்வை அனுபவிக்கக் கருதுவது மகா தப்பிதம் அன்றோ! இது அவனுடைய அறிவின்மைக்கு எடுத்துக் காட்டன்றோ! பாரினில் பணக்காரன், அன்றேல் பரம ஏழை. இவை இரண்டிற்கும் இடையிலுள்ள இடைநிலையர் ஏக்க நிலையில் தவிக்கவேண்டும் என எண்ணினன்.

உயர் குலம் என்று உலகம் ஒப்பும் பண்ணைக்காரன் மகன்தான், பதினெட்டுப் பிராயம் உடைய அமலராசன். இவன் ஐந்து வயதுள்ளவனாய் இருக்கும்போது அவன் தந்தை அவனோடு ஐந்து குழந்தைகளை அம்மா தலையில் பொறித்து விட்டுத் திரும்பாப் பயணம் சென்று விட்டார். ஐந்தாண்டு செல்ல அம்மாவும் சென்றாள் அவ்வழியே. ஐந்துபேர் கொண்ட அமலனின் குடும்பம் அனாதை யாகியது.

உடைப் பிரச்சனை. உணவுப் பிரச்சனை. வீட்டுப் பிரச்சனை. இவைகள் மத்தியில் சாந்தி எப்படிவரும்? நான்று கொள்ளலாமா? நஞ்சு உண்ணலாமா? எப்படியோ ஒரு திட்டம் போட்டான். ஆனால், தற்கொலை என்பது பெரிய பாவம் என்று நினைத்துத் திட்டத்தை மட்டமாக்கினன்.

காலை 4 மணி அடித்தது. அமலனின் தம்பி அருள் எழுந்து பூசைக்குப் போகுமுன் படிக்க ஆரம்பித்தான். "தம்மின் எளியாரை நோக்கித் தமது உடைமை அம்மா பெரிது என்று அகமகிழ்க..." என்ற சப்தம் கேட்டு விழித்தான் அமலன். கோவிலில் திருந்தாதி அடித்தது. உடைந்த உள்ளம் சாந்திநிலையை அடையவேண்டி உடனே பூசைக்குப் போனன். அங்கே "என்னத்தை உண்போம், எதை உடுப்போம் என்று கவலைப் படாதீர்கள்; பறவைகள் விதைப்பதும் இல்லை; அறுப்பதும் இல்லை; ஆயினும் பரமபிதா அவைகளைப் போஷிக்கிறார்; உள்ளதைக் கொண்டு இன்புறுவதேமேல்; உன்னிலும் எளியோர் எத்தனையோ பேர் உண்டு அல்லவா?" என்று கோவிலிலே சுவாமியார் உருக்கமான ஓர் பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கம் எனக்குத்தான் என்று எண்ணிக் கொண்டு அமலன் கோவில் வெளிவாயிலை அடைந்தான்.

"கண்ணில்லாதவன், காற்பணம் தாருங்க; முடவன் முக்காத்துட்டுப் போடுங்க" என்ற குரல்கள் அவனை வரவேற்றன. அவர்களிலும் மேலானது தனது அந்தஸ்து என்று எண்ணிச் சாந்தியுடன் இல்லம் சென்றான்.

— ஆசிரிய மாணவி

---

சூரியன் பூமியிலும்பார்க்க எத்தனைலட்சம்மடங்குக்கு பெரிதானது?

பத்துலட்சம் மடங்குக்குமேல் பெரிதானது.

# அறிவுச் சுடர்

**1.** துருவநட்சத்திரம் என்பது ஒரேயொரு நட்சத்திரம்தானா?

இல்லை. மூன்று நட்சத்திரங்கள் சேர்ந்து ஒன்றாகக் காட்சியளிப்பது. பூமிக்கும், இந்தநட்சத்திரங்களுக்கும் இடையிலுள்ள மிகப்பெருந்தூரமே இவைகளை ஒரு நட்சத்திரமாகக் காணச்செய்கின்றது.

**2.** சூரியனின்ஒளி எத்தனைமெழுகுவர்த்திகளின் வெளிச்சத்துக்குச் சமமானது?

30லட்சகோடியே 10லட்சகோடி மெழுகுவர்த்திகளின் வெளிச்சத்துக்குச் சமமானது.

**3.** சூரியனிலும்பார்க்க நூறுமடங்கு ஒளியுள்ள நட்சத்திரங்களும் இருக்கின்றனவா?

ஆம், எஸ். டொருடஸ்எனும் நட்சத்திரங்களின்ஒளி சூரியனின் ஒளியிலும்பார்க்க மூன்றுலட்சம் மடங்கு பிரபையானது.

**4.** நட்சத்திர மண்டலமென்று வானசாஸ்திரிகள்கூறும் வட்டத்தில் எத்தனைநட்சத்திரங்கள் இருக்கின்றன?

இருபதினயிரகோடி நட்சத்திரங்கள் இருக்கின்றன.

**5.** பைந்துக்கும் (Pint) றுத்தலுக்கும் (Pound) வித்தியாசம் உண்டா?

இல்லை. முந்தியது தண்ணீர்போன்றவற்றின் நிறையைக்குறிப்பது. பிந்தியது சாமான்களின் நிறையைக்குறிப்பது. ஒருபைந்துதண்ணீர் ஒருறுத்தல்நிறையுள்ளது. முதலில்இருசொற்களும் ஒரேஅர்த்தமுள்ளனவாகவே இருந்தன.

**6.** உலகில் மிகஆழமான எண்ணெய்க்கிணறு எங்கே இருக்கின்றது?

அமெரிக்க ஐக்கியதேச கலிபோணியாவில் இருக்கின்றது. இதன் ஆழம் 7,591அடி. ஆனால், முதல்எண்ணெய்க்கிணறு அங்கே பெனிசில்வேனியாவில்தான் 1859-ம்ஆண்டு அகழப்பட்டது.

**7.** பறக்கக்கூடிய மிகப்பெரிய பறவை எது?

திறம்பெற்றர்எனும் பறவையேயாகும். இதன்நிறை 35றுத்தல். இதற்கு அடுத்தபடியாகக் கிறேற்பஸ்ராட்எனும் பறவையே. இது தனதுஇறக்கைகளை விரித்துப் பறக்கும்போது அவற்றின் நீளம் எட்டுஅடியாகும்.

**8.** ஓர்மனிதன் நிமிஷம்ஒன்றுக்கு எத்தனைமுறை சுவாசிக்கிறான்?

16முதல 20முறை சுவாசிக்கிறான். ஆனால், குழந்தைகளும், காய்ச்சல்காரரும் இதிலும்கூடிய தொகையாய்ச் சுவாசிக்கிறார்கள்.

**9.** பிரித்தானிய பாராளுமன்றப் பொதுமக்கள்சபையிலே தற்போது எத்தனை கத்தோலிக்கபிரதிநிதிகள் இருக்கின்றார்கள்?

22 கத்தோலிக்கபிரதிநிதிகள் இருக்கின்றார்கள். இவர்களிலே கடைசியானவர், சமீபத்தில்நடந்த இடைத்தேர்தலில் கன்சர்வேற்றிவ்கட்சிப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்ற திரு. பற்றிக் உவால்அவர்களே.

**10.** முதலிலே வேதபுத்தகம் ஒரே பாஷையில்தானா எழுதப்பட்டது?

இல்லை. எபிரேய பாஷையிலும், நமது திவ்வியகர்த்தர் பேசிய அரமக்கிய பாஷையிலும், கிரேக்கபாஷையிலும் எழுதப்பட்டது.

**11.** லத்தறன்உடன்படிக்கைக்குப் பின் சுதந்திரம்பெற்ற ஓர்தனிஇராச்சியமான வத்திக்கானிலே தற்போது நடைபெறும் ஆட்சிவிதிமுறையை நிர்மாணித்தவர் யார்?

சமீபத்தில்காலஞ்சென்ற கருதினல் [illegible]வரே

# உதிர்ந்த மலர்கள்

கி. பி. 496-ம் ஆண்டு குளோபிஸ் அரசர் பிரான்ஸ்நாட்டிலுள்ள றீம்ஸ் நகரிலே அர்ச். மார்ட்டினின் ஆலயத்தில் ஞானஸ்நானம்பெற்றார். திருச்சடங்கை நிறைவேற்றியவர் அர்ச். றெமிஜியுஸ் மேற்றிராணியார். இது அரசனின்உள்ளத்தில் நன்கு பதியவேண்டுமென மேற்றிராணியார் விரும்பினர். ஆலயத்துக்கு நடந்துசெல்லும் பாதையில் அழகிய கம்பளங்கள் விரிக்கப்பட்டன. ஆலயத்தையும் மிகஅழகாகச் சோடித்தார்கள். எண்ணமுடியாத மெழுகுதிரிகள் தங்கள் பிரகாசத்தையும், வாசனையையும் ஆலயமுழுவதும் வீசின. மிகவிலையுயர்ந்த மலர்களிலிருந்துஎடுத்த வாசனைத்தைலத்தில் தோய்த்தமெழுகால் அந்தத்திரிகள் செய்யப்பட்டிருந்தன. இவைகளையெல்லாம் பார்த்தஅரசன் அதிஆச்சரியம் அடைந்து, மேற்றிராணியாரைப் பார்த்து: "எனக்கு நீங்கள் வேதசத்தியங்களைக் கற்பிக்கையில் மோட்ச இராச்சியத்தைப்பற்றி அடிக்கடிசொன்னீர்களே; அதுஇதுதானா?" என்று கேட்டார். "இல்லை, இது மோட்ச இராச்சியத்தின் பலவீனமான ஒரு சாயல்" என்று மேற்றிராணியார்கூறிப் பாடுபட்ட ஆண்டவர் வரையப்பட்டிருந்த ஒருபடத்தை அரசனுக்குக் காண்பித்து: "அந்தஇராச்சியத்துக்கு உம்மை நடத்திச்செல்லக்கூடிய வாசல் அதுவே" என்றார்.

* * *

பாத்திமாவில் மாதாவைத்தரிசிக்கப் பாக்கியம்பெற்ற சிறுவர் மூவருக்கும் ஒருநாள் ஓர்கூடைநிறைய ருசியான அத்திப்பழங்கள் கிடைத்தன. ஜஸிந்தா ஓடிச்சென்று ஒருபழத்தை எடுத்தாள். திடீரென அவளுக்கு ஒருயோசனைவந்தது. அதைச் சாப்பிடவில்லை. "பொறுத்திருங்கள். நாம் இன்று தினம் பாவிகளுக்காக இன்னும்பரித்தியாகம்ஒன்றும் செய்யவில்லை; இந்தப் பழங்களில் ஒன்றையும் நாம்தொடாமல் இந்தப் பரித்தியாகத்தைப் பாவிகளின் மனந்திரும்புதலுக்காகக் கடவுளுக்கு ஒப்புக்கொடுப்போமாக" என்று சொல்லி, அந்தக்காணிக்கையை மூவர் பேராலும் ஒப்புக்கொடுத்தாள்.

* * *

அல்போன்ஸ் லிகோரியார் பெரிய அர்ச்சியசிஷ்டர். புண்ணியவாழ்க்கை நடத்தியவர். ஆனால், வயோதிப பருவத்திலும் கொடிய பலசோதனைகள் அவருக்குஉண்டாயின. "எனக்கு 83 வயதாகிறது; ஆனால், என்வாலிபவயதின்நெருப்பு இன்னும்அணையவில்லை" என்று ஒருகுருவானவரிடம் கூறினர். "ஓ! என் யேசுவே, நான் சோதனைக்கு இணங்குவதைவிடச் சாகும் வரந்தாரும்; மரியாயே, நீர் உதவிசெய்யாவிடில் நான் யூதாஸைவிட அதிகபாவத்துக்காளாவேன்" என்று அவர் சத்தமாய்ச்சொன்னதைப் பலர்கேட்டிருக்கின்றனர்.

* * *

லிசிமாக்குஸ் என்பவன் மசதோனியநாட்டின் அரசன். ஒருமுறை தன்எதிரியுடன் அவன் போர்செய்கையில், குடிதண்ணீர்வருவதை எதிரிகள் தடுத்துவிட்டார்கள். தாகத்தின் கொடுமையைச் சகிக்கமாட்டாமல், ஒரு கோப்பைதண்ணீருக்காக அவன் தன்னையும், தன்சேனையையும், தன் இராச்சியத்தையும் எதிரிகளிடம் கையளித்தான். தண்ணீரை அருந்தியபின், வெறுமனயிருந்த அந்தக் கோப்பையைப்பார்த்து அவன்பெருமூச்சுவிட்டு, "சொற்ப திருப்திபெறும்படி நான்என் இராச்சியத்தை இழந்துபோனேனே" எனக்கூறித் தான்சிந்திய கண்ணீர்த் துளிகளால் அந்தக்கோப்பையை நிரப்பினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முப்பது வெள்ளிக்காசு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கையிலெடுத்தார். பாம்பைத்தொட்டவர்போலத் துடித்தார். அந்தரூபாவின் மீது முப்பதுவெள்ளிகள் என்று சிவப்புமையால் எழுதப்பட்டிருந்தது 'இரத்தக்காசு' என்றிருந்ததைக் கண்டதும் அவரது நாடித்துடிப்பு, ஒரு கணம் நாடித்துடிப்புமானிக்கு அப்பால்நின்றது. ஏதோசொல்லமுடியாத ஒருதுன்பவேதனை அவர்உள்ளத்தை வாட்டிப்பிழிந்தது. பின்புறமாக வந்துநின்றபுஷ்பா, "நூறுரூபா அந்த ஏழைப்பெண்ணின் புருஷனுக்கு உயிர்கொடுத்துவிட்டதா? அந்தமனிதனை நீங்கள் காப்பாற்றிவிட்டீர்களா?" என்று சற்றுமனக்கொதிப்போடு கேட்டாள். அந்தக்கேள்வி உயர்ந்தமலையிலிருந்த அவரைப் பாதாளத்துக்கு உருட்டிவிடுவதுபோல் இருந்தது. அறிவுமயங்கியவர்போல் அசையாது கிடந்தார். மீண்டும் தொடர்ந்துபேசினுள் புஷ்பா.

"நூறுரூபாமீது உங்களுக்கு இருந்தபற்றில் அணுவளவேனும கடவுள்மீது இருந்திருந்தால், அந்த மனிதன் நிச்சயமாகப் பிழைத்திருப்பான்; பணம், பணம்என்று பணத்துக்கு மனுத்தன்மையை விற்றுவாழும் உங்கள்நிலைமை எவ்வளவு பரிதாபகரமானது என்பதை எணணிப்பாருங்கள்; அன்பும், இரக்கமும்நிறைந்த உங்கள் புனிதசேவையைப் பணத்துக்கு ஏன் அடகுவைத்தீர்கள்; இப்படி எத்தனை ஏழைகளின் கண்ணீரும், இரத்தமும், உயிரும் உங்கள்பணப்பெட்டியில் லஞ்சம்என்றரூபத்தில் தஞ்சம்புகுந்திருக்கின்றன; இந்தப் பேராசையால்தான் யூதாஸ் குற்றமற்றயேசுவை இரத்தவெறியர்களுக்கு முப்பதுவெள்ளிக்காசுக்குக் காட்டிக்கொடுத்தான். அந்தஇரத்தப்பணந்தான் இன்று கைலஞ்சமாகி, ஏழைகளின்உயிர்களுக்கு விலைபேசுகிறது" என்று உணர்ச்சிபீறிடப் பேசினுள்.

புஷ்பாவின் ஒவ்வொருசொல்லும் ஈட்டியாகப்பாய்ந்து டக்றரின் உள்ளத்தைக் குத்திப்பிளந்தது. "புஷ்பா! புஷ்பா! போதும், போதும்; என் மூளையே சிதறிவிட்டது; இனியும் என்னைக்கொல்லாதே; என்மனச்சாட்சியே என்னைச்சுட்டெரிக்கிறது; பேராசையால் பித்தனுகமாறிவிட்டேன்; அநியாயத்துக்கு அடிமையாகப் பணிந்துவிட்டேன்; இரத்தப்பழிகாரனை என்னை மனப்பூர்வமாக மன்னித்துவிடு; கரும்பான உன்வார்த்தைகள் இரும்பான என்நெஞ்சத்தை உருக்கிவிட்டன; ஆண்டவனிடம் எனக்கு மன்னிப்புபெற்றுத்தா" என்றுகதறினுர். புஷ்பா தேம்பித்தேம்பிக் குழந்தைபோலஅழுதாள். கணவனின் வார்த்தைகள் அவளை ஆனந்த உலகில் தூக்கிவீசின. அவரது தோள்களை இறுகப் பற்றிக்கொண்டாள். "என்பிழையை மன்னித்துவிடுங்கள்; நாம்பிழைத்தோம்" என்றுள் அவள். கண்களைமூடி மௌனப்பிரார்த்தனை செய்தாள். சாந்தியும், அமைதியும் அங்கு சேர்ந்துறவாடின. டக்றர் ஞானத்தின் முகம் பளிங்குபோன்று தெளிந்தது.

(கதைகற்பனையே)

### அர்ச். சூசையப்பர் பந்தியின்

## வருடாந்த அறிக்கை

யாழ்ப்பாணம், சென் வின்சென்ற் டி போல்சபை அர்ச். சூசையப்பர் பந்தியின் 1953-ம் ஆண்டுக்கான 46-ம் வருட அறிக்கை வருமாறு:

**காரிய அங்கத்தவர்கள்:** பந்தியில் 26 காரியஅங்கத்தவர்கள் கடமையாற்றுகின்றனர். இவ்வருடத்தில் 45 கூட்டங்கள் நடைபெற்றன. சாரசரி 20 அங்கத்தவர்கள் சமுகமளித்திருக்கின்றனர்.

**உபகரிப்பு:** இவ்வருடம் தர்ம உதவிகள்செய்ய 3,848 ரூபா 51 சதம் கிடைத்தது. இதில 32 குடும்பங்களிலுள்ள 114 பேருக்குக் கிழமைவீதமும், 460 பேருக்குத் தருணஉதவியுமாக 2,195 ரூபா 69 சதம் உபகரிக்கப்பட்டது. ஏழைகளின்வீடுகள் வேய்வதற்கும், சிறுவியாபாரங்கள் தொடங்குவதற்கும், வறியபிள்ளைகள் புத்தகங்கள் வாங்குவதற்கும், அந்தரித்தோரின் பயணச்செலவுகளுக்கும், பிரேத அடக்கங்களுக்கும் 245ரூபா 05 சதம் செலவுசெய்யப்பட்டது. இன்னும் நல்லூர்மீசாம் வேதப்பரப்புதல்வேலைக்கும், வயோதிபர்சாலை, மறியல்வீடு, பத்திக்கூட்டங்களுக்கும் 185 ரூபா கொடுக்கப்பட்டது. இவையன்றி, பந்தியின் உபகாரிகளுக்காகப் பூசைகள் செய்விக்க 27 ரூபா செலவுசெய்யப்பட்டது.

**ஞானவேலைகள்:** ஏழைகளின் இல்லங்களுககு 2,060 முறைசென்றும், ஆஸ்பத்திரியில் 923 முறை நோயாளரைச்சந்தித்தும், மறியல்வீட்டில் உள்ளோரைப் 14 முறைசந்தித்தும் செய்யக்கூடிய ஆன்ம, சரீரநன்மைகள் செய்யப்பட்டன.

**இலவசபுத்தகசாலை:** பந்தியின் புத்தகசாலையிலிருந்து 196 புத்தகங்களும், 460 பத்திரிகைகளும் வாசிக்கக் கொடுத்து நல்வாசினைமூலம் அறிவைப் பெற உதவிசெய்யப்பட்டது.

**அர்ச். அந்தோனியார் தருமஅப்பக் காணிக்கை:** இவ்வருடம் அர்ச். அந்தோனியார் தருமஅப்பக் காணிக்கையாக 2,449 ரூபா 36 சதம் கிடைத்தது. கடந்தவருடத்திலும் 24 ரூபா 79 சதம் குறைவாகக்கிடைத்திருப்பினும் பெருந்தொகையானவர்கள் அர்ச். அந்தோனியார்போரால் அளப்பரிய நன்மைகள் அடைந்துள்ளார்கள்.

**பிடியரிசித் தண்டல்:** காரியஅங்கத்தவர்கள் உபகாரிகளின் இல்லங்களுக்குச்சென்று மாதந்தோறும் அவர்கள் சேமித்துஉதவும் அரிசியைப் பெற்றுவந்தனர். ஆனல், இப்போது பிடியரிசிக்காக அவர்கள் சிறுதொகைப் பணம் உதவிவருகின்றூர்கள். பந்தியின் எல்லைக்குள் காரியஅங்கத்தவர்கள் 7 பிரிவுகளாகச்சென்று மாதந்தோறும் சேர்த்த இவ்விதபணமே பிடியரிசியாகச் சேர்க்கப்பட்ட தொகையாகும். இவ்வருடத்தில் 211 ரூபா 65 சதம் பிடியரிசிக்காகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**நத்தார்த் தண்டல்:** நத்தார்த் தணடலுக்காகச் சகோதர அங்கத்தவர்கள் எமதுஉபகாரிகளிடம் சென்றபோது அவர்கள் வழமைபோலத் தாராளமனதுடன் உதவிசெய்ததினுல் 411 ரூபா 75 சதம் கிடைக்கலாயிற்று. சிலர் வருடம்முடிந்தபின்னரே தங்கள் பணத்தை உபகரித்தார்கள். அவர்களாற் சேர்ந்ததொகை 24 ரூபாவும் 1954-ம் ஆண்டுக்கணக்கிற் சேர்க்கப்பட்டுள்ளது.

**சேன் வின்சேன்ற் டி போல் திருநாள்:** எமதுபந்தியின் பாதுகாவலராகிய சென் வின்சென்ற் டி போல் திருநாள் வழமைப்பிரகாரம் ஆடிமாதம் 19-ம் திகதி எமது கூட்டக்கோவிலிற் கொண்டாடப்பட்டது.


**SALE**

Studebaker Car CL 5527 in good condition throughout.

*Apply to:—*

J. A. DE SILVA,
Forest Department,
Colombo.

— யாவாதீவிலுள்ள மரியாய் சபைகளின் தலைமைக்காரியாலயம் லூர்து, பாத்திமா, ரோமாபுரி ஆகியாம் இடங்களுக்கென இந்தோனேசியர்களின் திருயாத்திரை ஒன்றை ஒழுங்குசெய்திருக்கிறது. இந்தயாத்திரை வருகிறஆடி 31-ந் திகதிமுதல் ஐப்பசி 12-ந் திகதி வரையிலே நீடித்திருக்கும்.



## இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனல் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறுன். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனுகைப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறுன். ஏதாவது அபாயம் நேருவதானல், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறுன். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

**சிலோன் இன்ஷூரன்ஸ்**

**கம்பெனி லிமிட்டெட்,**

தலைமை ஆபீஸ்:

**69, இராணி வீதி — கொழும்பு.**

Zeylon Iusurance Co. Ltd., 69. Queen St., Colombo

### பனையோலைப் பாய்கள்

வியாபாரப் பொருட்களைமூடிப் பார்சல்களாகக்கட்டிப் பிறவிடங்களுக்கு அனுப்பிவைக்கப் பனையோலைகொண்டு இழைக்கப்பெற்றபாய்கள் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியாம்நாடுகளிலே தற்போது உபயோகிக்கப் படுகின்றன. சென்றவருடம் ஐம்பதினுயிரம் பனையோலைப்பாய்கள் அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. இன்னும் ஏராளமான பனம் ஈர்க்குகள் அமெரிக்க ஐக்கியதேசத்துக்கு ஏற்றுமதிசெய்யப் படுகின்றன. அங்கு சிலதொழிற்சாலைகளில் அவைகள்தேவைப்படுகின்றன.

### 2,000 சங்கக்கடைகள்

இலங்கை முழுவதிலும் நட்டத்துடன் நடத்தப்பட்டுவருகின்ற சுமார் இரண்டாயிரம் கூட்டுறவுப் பண்டகசாலைகள்—அதாவது சங்கக்கடைகள் அடுத்த மூன்று மாதங்களுக்கிடையில் மூடப்படவிருக்கின்றன. அரசாங்க கூட்டுறவுப்பகுதிப் பிரதமஅதிகாரிகளின் கூட்டமொன்று சென்றசனிக்கிழமை நடைபெற்று, அதிலே இவ்வாறு செய்யப்பட வேண்டுமென்று உணவு-கமத்தொழில்மந்திரியார் தெரிவித்துள்ளனர். இலங்கையிலுள்ள 3,500 கூட்டுறவுப் பண்டகசாலைகளில் ஏறக்குறைய இரண்டாயிரமும் பேரளவில்தான் இருப்பதாக அக்கூட்டத்தில் வெளியிடப்பட்டது. இவைகள் கலைக்கப்பட்டு, நட்டமின்றிநடைபெறும் பண்டகசாலைகளுடன் சேர்க்கப்படும், அல்லது கூட்டுறவு ஐக்கியசங்கங்களின் கிளைகளாக இணைக்கப்படும்.

### மரணசங்கதி

காவலூர்வாசரும், கொழும்புப் பெரியதபாற்கந்தோரில் உத்தியோகம் வகித்திருந்து இளைப்பாறித் தற்போது ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார்கல்லூரி வாசிகசாலை அதிபராயிருப்பவருமான திரு. எஸ். அம்புறோஸ் அவர்களின் ஏகபுதல்வனுகிய செல்வன் யோசெவ் பிரான்சீஸ் சேவியர் தனது வலதுமுழங்காலில் வீக்கங்கண்டு ஆறுமாதகாலமாய்த் தகுந்த வைத்தியஞ் செய்யப்பெற்றுங் குணமுறாது தனது பதினுன்காம்வயதிலே சென்ற 16-ந் திகதி பெரியவெள்ளிக்கிழமை காலஞ் செல்லலாயினர். மறுநாட்சாயந்தரம் இவரின்பிரேதமான நகிரளான இனசனர், சிநேகிதர், ஆசிரியர், மாணவர் கூடியசமுகத்திலே வண. வீ. தார்சீசியஸ் சுவாமிஅவர்கள் துக்க சங்கீதம் பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரைஇழந்து துன்புறும் பெற்றுர், சகோதரர்முதலானோருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 29-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org